விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 035 வள்ளுவர் ஆண்டு 2057 தை 09 வெள்ளிக்கிழமை (23.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2026
JANUARY ஜனவரி
23 24 25
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds
முற்றவெளி மைதானம்
இன்று
ஆரம்பம்
ORGANIZED BY
LECS
LANKA EXHIBITION

## மின்சார சபை மறுசீரமைப்பு அடுத்த மாதம்

### எரிசக்தி அமைச்சு

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் நடைமுறையை எதிர் வரும் 30 நாட்களுக்குள்

02ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

### முற்றவெளியில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

16ஆவது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண் காட்சி இன்று வெள்ளிக் கிழமை யாழ்.முற்றவெளி மைதானத்தில் ஆரம்பமாக வுள்ளது.

வெள்ளி, சனி, ஞாயிறு என மூன்று தினங்களும் நடைபெறவுள்ள இக் கண் காட்சியில் பிரதம விருந் தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும்

15ஆம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவில் சிறுமி மரணம் நடவடிக்கை முன்னெடுப்பு

### சபையில் சுகாதார அமைச்சர் நளிந்த

(கொழும்பு)



முல்லைத்தீவு, மாஞ்சோலை வைத்தியசாலையில் உயிரிழந்த சிறுமி குகநேசன் டினோஜாவின் மரணம் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவை அலுவலகத்தின் ஊடாக விசாரணைகள்

02ஆம் பக்கம் பார்க்க

## காணாமல் போனவர்கள் தொடர்பாக

# 2 ஆண்டுகளுக்குள் விசாரணை நிறைவு

### நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார



- மனிதப் புதைகுழியுடன் தொடர்புடைய குற்றவாளிகளைத் தண்டிக்க நடவடிக்கை.
- காணாமல் போனவர்கள் தொடர்பில் 11 ஆயிரம் முறைப்பாடுகள் பதிவு.

(02ஆம் பக்கம் பார்க்க)

### எதிர்வரும் சனி, ஞாயிறு

## யாழ்.சர்வதேச சட்ட மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத் துறையானது இந்தியா

15ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை
முன்னிட்டு
வலம்புரி நாளிதழ் நடத்தும்
பொது அறிவுப் போட்டி
- 2026
உள்ளே...

## யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின்

### சேவை விரிவாக்கம் தொடர்பில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தற் போதைய சேவைகள் மற் றும் எதிர்காலத்தில் விரிவு படுத்த வேண்டிய சேவை கள் தொடர்பான விடயங் கள், பாராளுமன்ற சுகாதார மேற்பார்வைக் குழுவின் கூட்டத்தில் நேற்று முன் தினம் விரிவாக ஆராயப்பட் டன.

15ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சி கிழக்கில் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் தொடர்பான விபரங்கள் இல்லை

### பிரதேச செயலகம் தகவல்

(யாழ்ப்பாணம்)

வன ஜீவராசிகள், திணைக் களம் வன பாதுகாப்புத் திணைக்களம், கரையோர பாதுகாப்புத் திணைக்களங் கள் ஆகியவற்றால் வடம ராட்சி கிழக்கு பிரதேசத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட காணி கள் தொடர்பான விபரம் எது வும் இல்லை என வடம ராட்சி கிழக்குப் பிரதேச செய லகம் தகவல் வழங்கியுள் ளது.

காணி உரிமைக்கான மக்கள் இயக்கத் தலைவர் இ.முரளிதரனால் வடம ராட்சி கிழக்குப் பிரதேச செய லகத்திடம் கோரிய தகவ லிற்கு அவர்கள் வழங்கிய பதிலிலேயே இவ்வாறு

02ஆம் பக்கம் பார்க்க

### நாடளாவிய ரீதியில்

## வைத்தியர்கள் 48 மணிநேர அடையாள பணிப் புறக்கணிப்பு

### சுகாதார சேவைகள் ஸ்தம்பிக்கும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியிலுள்ள அரச வைத்தியசாலைகளில் உள்ள வைத்தியர்கள் இன்று (23) காலை 8 மணி முதல் 48 மணிநேர காலப்பகுதி யில் அடையாள பணிப் புறக் கணிப்பை முன்னெடுக்க வுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரி வித்துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

### அநுராதபுரத்தில்

## மண்மேடு சரிந்ததில் மூவர் உயிரிழப்பு

(அநுராதபுரம்)

அநுராதபுரம் அஹங் கம பெலஸ்ஸ பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்த தில் மூவர் உயிரிழந்துள்ள னர்.

15ஆம் பக்கம் பார்க்க

### வீதியில் பயணித்த மோ.சைக்கிளைப் பார்த்து

## நிலைகுலைந்து கீழே விழுந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வீதியில் பயணித்த மோட் டார் சைக்கிளைப் பார்த்து நிலைகுலைந்து கீழே விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள் ளார்.

தெல்லிப்பழை கிழக்குப் பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவில்...

முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் இடைக்கால அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கமைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை (22) நடைபெற்ற அமர்வின் போது நிலையியல் கட்டளை 27/2 இன் கீழ் யாழ். மாவட்ட சுயேட்சைக்குழு உறுப்பினரான அர்ச்சுனா இராமநாதனால் ஜனவரி 9 ஆம் திகதி சுகாதார அமைச்சரிடம் எழுப்பப்பட்டிருந்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

முல்லைத்தீவு, சிலாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த குகநேசன் டினோஜா என்ற 12 வயதுச் சிறுமியின் மரணம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா கேள்விகளை எழுப்பியிருந்தார்.

அந்தச் சிறுமி மாஞ்சோலை வைத்தியசாலையில் 2025 டிசம்பர் 21ஆம் திகதியன்று இரவு 7.20 மணிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். அதன்போது வெளிநோயாளர் பிரிவில் இருந்த வைத்தியர் அந்தச் சிறுமியை சிறுவர் வாட்டுக்கு மாற்றாமல் அவசர சிகிச்சைப் பிரிவுக்கே மாற்றியுள்ளார். 5 நிமிடங்களில் அவரை அங்கு அனுமதித்துள்ளார்.

இந்த வைத்தியசாலை மாவட்ட பொது வைத்தியசாலை பிரிவுக்குள் உட்பட்டது. அதன் பணிப்பாளர் அன்றைய தினத்தில் விடுமுறையில் இருந்தார். குறித்த சிறுமி அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றிய பின்னர் சிறுவர் பிரிவில் இருந்த சிறுவர் வைத்தியர் ஒருவர் அந்தச் சிறுமியை பரிசோதித்துள்ளார். அதன்போது சிறுமிக்கு உணவு ஒவ்வாமை அறிகுறிகள் இருந்துள்ளது. பரிசோதனைகளுக்கமைய சிறுவர் பிரிவு வைத்தியர் பரிந்துரைத்த சிகிச்சை சிறுமிக்கு வழங்கப்பட்டுள்ளது.

சிறுமி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சட்டதிட்டங்களுக்கமைய முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த மரணம் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவை அலுவலகம் ஊடாக விசாரணைகள் இடம்பெறுவதுடன், இடைக்கால அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது. இதன் இறுதி அறிக்கை கிடைத்த பின்னர் விளக்கமான அறிக்கை முன்வைக்கப்படும்.

இதேவேளை மாகாண சுகாதார சேவை அலுவலகத்தின் இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சிறுமியின் மரணம் தொடர்பில் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது. அதன்படி அந்த பரிசோதனையின் மாதிரி அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அறிக்கை கிடைத்த பின்னர் மேலும் விடயங்களை முன்வைக்க முடியும் என்றார். (ம-7)




அமரர் திருமதி சிவதேவி
காங்கேசன் அவர்களது
15 ஆம் ஆண்டு நினைவு
தினமும்



அமரர் திரு. சின்னத்தம்பி
காங்கேசன் அவர்களது
31 ம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும்

எங்கள் வாழ்வின் வழிகாட்டியாகவும் எமது குல விளக்குமாகிய அமரர் சின்னத்தம்பி காங்கேசன் அவர்கள் கடந்த 22.12.2025 இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தியறிந்து இல்லத்திற்கு நேரில் வந்து எமது துயரத்தில் பங்குபற்றிய அன்பு உறவுகளுக்கும் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நின்ற உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் அனைவரிற்கும் மனமார்ந்த நன்றிகள். இறுதிக்கிரியை இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பேனர்கள் மூலம் மரியாதை செய்தவர்களிற்கும் புலம்பெயர் நாடுகளில் இருந்து ஆறுதல் தெரிவித்தோருக்கும் நினைவஞ்சலி நாள்வரை தேநீர் மற்றும் உணவுகள் பரிமாறிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடந்த 21.01.2026 புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இடம்பெற்றது. வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் 25.01.2026 ஞாயிற்றுக்கிழமை குமுழமுனையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும். இந் நிகழ்வை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நண்பகல் 12.00 மணியளவில் இடம் பெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் மன நிறைவோடு அன்புடன் அழைத்துநிற்கின்றோம்.

சுகணா இல்லம்,
குமுழமுடி, அல்வாய். (C-4863)

என்றும் நீங்காத
நினைவுகளுடன்
மகன்மார் குடும்பத்தினர்


## வடமராட்சி...

குறிப்பிட்டுள்ளனர்.

பல ஏக்கர் தனியார் காணிகள் உட்பட அரச காணிகளும் வன ஜீவராசிகள் திணைக்களம், வன பாதுகாப்பு திணைக்களம், கரையோர பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றால் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் சட்டமுரணாக கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவற்றை விடுவிக்குமாறு மக்களால் பல தடவைகள் ஒருங்கிணைப்பு கூட்டம் உட்பட பல கூட்டங்களில் கோரிக்கை விடுக்கபட்டிருந்தது.

இவ்வாறான சூழ்நிலையில் வன ஜீவராசிகள் திணைக்களத்தால் அபகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பான விபரம் இல்லை என குறிப்பிடப்படுவது வியப்பாகவுள்ளதாக காணி உரிமைக்கான மக்கள் இயக்கத் தலைவர் இ. முரளிதரன் குறிப்பிட்டுள்ளார். (ம-7,104)

## மின்சார சபை...

முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான அனைத்து வேலைத்திட்டங்களும் தற்போது இறுதிக் கட்டத்திலுள்ளதாக எரிசக்தி பிரதியமைச்சர் எம்.எம்.அர்கம் தெரிவித்தார்.

இந்த மறுசீரமைப்பை துரிதப்படுத்துவதற்கான செயலணி ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் தெரிவித்தார். (ம-7)

## 2 ஆண்டுகளுக்குள்...

காணாமல் போனோர் அலுவலகத்தின் ஆரம்ப விசாரணைக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் விசாரணைக் குழுக்களின் முதல் குழு உறுப்பினர்களை உணர வைப்பதற்கான முதல் பயிற்சித் திட்டம் மற்றும் அவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடல் நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் வழக்கறிஞர் ஹர்ஷன நாணயக்காரவின் பங்கேற்புடன் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

பயிற்சி நிகழ்ச்சிக்குப் பிறகு ஊடகவியலாளர்களிடம் பேசிய நீதி அமைச்சர்,

காணாமல் போனோர் அலுவலகம் பெறும் புகார்களை முறையாக விசாரிக்கவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு முக்கிய காரணம், இந்த அலுவலகத்தில் உள்ள பிரச்சினை அல்ல, அப்போதைய அரசியல் சூழ்நிலை. காணாமல் போனோர் அலுவலகத்தில் போதுமான ஊழியர்கள் இல்லாததால், 65 அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த அலுவலகத்தின் விசாரணைக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்க ரூ. 375 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. காணாமல் போனோர் தொடர்பான பதினொரு ஆயிரம் புகார்கள் இதுவரை இந்த அலுவலகத்திற்கு வந்துள்ளன. இந்த ஐயாயிரம் புகார்களின் விசாரணைகள் இந்த ஆண்டு நிறைவடையும் என்றும், அனைத்து புகார்களின் விசாரணைகளும் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் நிறைவடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

புகார்களை விசாரிப்பதன் முதன்மை நோக்கம் காணாமல் போனவர்களுக்கு இழப்பீடு வழங்குவது மட்டுமல்ல. அவர்கள் தங்கள் உயிருக்கு நீதியை விரும்புகிறார்கள். போர் முடிந்து பல ஆண்டுகள் கடந்துவிட்ட பிறகும், காணாமல் போனவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. அவர்கள் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளுக்குப் பிறகு, தேவைப்பட்டால் மேலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். கடந்த காலங்களில் ஏற்பட்ட வலிகளைத் தவிர்த்து, இந்த மக்களிடையே நம்பிக்கையை வளர்ப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

கேள்வி - தற்போது புதைகுழிகள் அகழ்வாராய்ச்சி தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் என்ன? அகழ்வாராய்ச்சிகள் தொடர்பாக டி.என்.ஏ சோதனைகள் குறித்தும் விவாதங்கள் உள்ளன. இது குறித்த கருத்து என்ன?

பதில் - இந்தப் புதைகுழிகள் அகழ்வாராய்ச்சி தொடர்பாக நாங்கள் சிறப்பு ஆர்வத்துடன் செயற்பட்டு வருகிறோம். தேவையான ஏற்பாடுகளை முறையாக வழங்கவும், இந்த அகழ்வாராய்ச்சிகளை வெளிப்படையாக நடத்தவும் நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். வெளிநாடுகளிலிருந்து அறிவியல் உதவிகளைப் பெற்று தேவையான விசாரணைகளை நடத்த நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அவர்கள் தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். விசாரணைகளின் போது தவறு செய்தவர்கள் தெரியவந்தால், அவர்களை தண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் உதவியுடன் டி.என்.ஏ மற்றும் பிற தொழில்நுட்ப ஆய்வகங்களைப் பெறவும் நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

கேள்வி - காணாமல் போனோர் அலுவலகத்திற்கு பெறப்பட்ட புகார்கள் தொடர்பாக இந்த பயிற்சி பட்டறையில் ஒரு தரவுத்தள அமைப்பு விவாதிக்கப்பட்டது. ஒரே காணாமல் போனவர் தொடர்பாக இரண்டு அல்லது மூன்று புகார்கள் வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.


பதில் - இந்த அலுவலகத்திற்கு ஒரு தரவுத்தள அமைப்பு அவசியம். இந்த அலுவலகம் 2018 இல் நிறுவப்பட்டது. காணாமல் போனவர்கள் தொடர்பாக பல ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. எனவே, ஒரு தரவுத்தள அமைப்பு தேவை.

கேள்வி - இந்த விசாரணைகள் வடக்கு மற்றும் கிழக்கில் காணாமல் போனவர்கள் தொடர்பாக மட்டுமே நடத்தப்படுகின்றனவா? மேலும் தெற்கில் காணாமல் போனவர்கள் குறித்தும் விசாரணைகள் நடத்தப்படுகின்றனவா?

பதில் - வடக்கு மற்றும் கிழக்கில் காணாமல் போனவர்கள் குறித்து மட்டுமல்ல. தெற்கிலும் காணாமல் போனவர்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்படுகின்றன. இந்த பயிற்சிகளுடன், தெற்கிலும் விசாரணைக் குழுக்கள் நிறுவப்படுகின்றன. 1988-89 இல் நடந்த காணாமல் போனவர்கள் குறித்தும் விசாரணைகள் நடத்தப்படுகின்றன. வடக்குக்கும் தெற்குக்கும் இடையில் ஒரு பிரிவு இருக்கக் கூடாது. விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். விசாரணைகள் நடத்தப்படுகின்றன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழியவளையில் கைக்குண்டு மீட்பு




(அராலி)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு பகுதியில் பற்றைக்காடொன்றில் இருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

ஆழியவளை பகுதியில் உள்ள பற்றைக்காடொன்றில் கைக்குண்டு காணப்படுவதாக, பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், சம்பவ இடத்திற்குச் சென்ற மருதங்கேணி பொலிஸார், அதனை பாதுகாப்பான முறையில் அகற்றியுள்ளனர்.

கைக்குண்டு மீட்கப்பட்டது தொடர்பில் கிளிநொச்சி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்த பின்னர், நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8-33-60-104)



சுதுமலை தெற்கு சாவல்கட்டு சீரடி சாய் பாபா ஆலய ப்ரஹ்மோத்ஸவம் நேற்றைய தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. மானிப்பாய் பிரதேச சபை தவிசாளர் ஜெசிந்தன் குறித்த நிகழ்வில் பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 300 | 300 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 160 | -- |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 450 | 450 |
| தக்காளி | 600 | 500 | 450 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 150 | 100 |
| கோவா | 250 | 300 | 300 | 200 |
| கரட் | 400 | 400 | 450 | 300 |
| பூசணி | 100 | 140 | 150 | 70 |
| புடோல் | 300 | 150 | 300 | 250 |
| வாழைக்காய் | 150 | 200 | 200 | 140 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 180 | 140 | 160 | -- |
| பாகற்காய் | 600 | 650 | 800 | 550 |
| வெண்டக்காய் | 400 | 400 | 600 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 250 | 300 | 200 |
| பயற்றங்காய் | 600 | 500 | 400 | 350 |
| லீக்ஸ் | 400 | 450 | 400 | 300 |
| பீற்றூட் | 300 | 600 | 600 | 500 |
| கறிமிளகாய் | 900 | 700 | 800 | 700 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 600 | 450 | 500 | 450 |
| கத்தரிதம்புள்ள | 350 | 200 | 280 | -- |
| கீரை - 1 பிடி | 80 | 70-150 | 150 | 170 |
| தேசிக்காய் | 300 | 200 | 150 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 180 | 100-140 | 110 |
| இராசவள்ளி | 600 | 500 | 500 | 425 |
| வெங்காயப்பூ | 600 | 300 | 600 | -- |
| முள்ளங்கி | 200 | 150 | 300 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 800 | 80 | 45 |
| வல்லாரை | 60 | 60 | 80 | 70 |
| ஈரப்பலா | 100 | -- | 120 | 90 |

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை முன்னிட்டு வலம்புரி நாளிதழ் நடத்தும்

# பொது அறிவுப் போட்டி - 2026

**நிபந்தனைகள்**

- ◆ வயதெல்லை வரையறுக்கப்படவில்லை.
- ◆ போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவருகின்ற பொது அறிவு வினாக்களுக்கு அந்தப் படிவத்திலேயே விடையளிக்க வேண்டும்.
- ◆ 2026 ஜனவரி 23, 24, 25, 26, 27 ஆகிய ஐந்து நாட்களில் ஒவ்வொரு நாளும் பத்துக் கேள்விகளாக, மொத்தம் 50 கேள்விகளுக்கு விடையளித்து அவற்றை ஒன்றாகச் சேர்த்து **வலம்புரி, இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு சாதாரண தபாலிலோ அன்றி நேரிலோ ஒப்படைக்க வேண்டும்.
- ◆ தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் பொது அறிவுப் போட்டி - 2026 எனக் குறிப்பிடவும்.

**முடிவு திகதி : 03.02.2026**

**பரிசு விபரம்**

- ❖ போட்டியில் 50 வினாக்களுக்கும் சரியான விடை அளித்தவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்களாக இருக்கும் பட்சத்தில், குலுக்கல் முறையில் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்.
- ❖ சரியான விடையெழுதியவர்களின் பெயர் விபரம் வலம்புரியில் வெளிவரும்.

- **முதல் பரிசு : 10, 000/=**
- **இரண்டாம் பரிசு : 7, 500/=**
- **மூன்றாம் பரிசு : 5, 000/=**
- **2000/= 10 ஆறுதல் பரிசுகள்**

**யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை முன்னிட்டு வலம்புரி நாளிதழ் நடத்தும் பொதுஅறிவுப் போட்டி - 2026**

பொது அறிவுப் போட்டி - 01

1. இலங்கையில் அதிக குளங்களைக் கட்டுவித்த மன்னன் யார்?
.................................................................
2. இரணைமடுக்குளத்தின் பரப்பளவு ஏக்கரில்?
.................................................................
3. இலங்கையில் அதி நீளமான தாம்போதி எங்கு உள்ளது?
.................................................................
4. இலங்கையில் முதலாவது பெண் கிராம சபைத் தலைவராக இருந்தவர் யார்? எந்த இடம்?
.................................................................
5. 2026 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி எத்தனை தடவையாக இடம்பெறுகிறது?
.................................................................
6. சங்கிலியன் மன்னனின் பட்டத்து இராணிகள் நீராடிய நீரோடையின் பெயர் என்ன?
.................................................................
7. யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமையவுள்ள இடத்தின் பெயர் என்ன?
.................................................................
8. ஐ.நா சபையின் தற்போதைய பொதுச்செயலாளர் யார்?
.................................................................
9. அண்மையில் அமெரிக்காவினால் கைது செய்யப்பட்ட ஜனாதிபதியின் பெயர்? எந்த நாடு?
.................................................................
10. அதிசிறந்த உலகத் தலைவர்கள் பட்டியலில் தற்போது முதலிடத்திலிருப்பவர்?
.................................................................

போட்டியாளரின் முழுப்பெயர்: .................................................

விலாசம்: .................................................

பிறந்த திகதி: .................................................

தொலைபேசி இலக்கம்: .................................................

திகதி: ................ ஒப்பம்: ................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்




## அபிஷேக் சர்மாவின்
# அதிரடி ஆட்டத்தால் வீழ்ந்தது நியூசிலாந்து

**ஐந்து போட்டிகள் கொண்ட ரி-20 தொடரின் தொடக்க ஆட்டத்தில் இந்தியா நியூசிலாந்தை 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.**

போட்டியில் அபிஷேக் சர்மா 35 பந்துகளில் 84 ஓட்டங்களை எடுத்தார். உலகின் நம்பர் 1 ரி- 20 துடுப்பாட்ட வீரரான அபிஷேக் சர்மா எட்டு சிக்ஸர்கள் மற்றும் ஐந்து பவுண்டரிகள் விளாச, இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 238 ஓட்டங்களை எடுத்தது.

இது இந்திய அணியின் நியூசிலாந்திற்கு எதிரான மூன்றாவது அதிகபட்ச ரி-20 ஓட்ட எண்ணிக்கை இதுவாகும்.

அதேநேரம், 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் முறையாக, நாக்பூர் மைதானத்தில் இந்தியா ரி-20 போட்டிகளில் இரண்டாவது முறையாக 200இற்கும் மேற்பட்ட ஓட்ட இலக்கினை எட்டிய சந்தர்ப்பம் இதுவாகும்.

அபிஷேக் சர்மாவைத் தவிர, இந்திய அணித் தலைவர் சூர்யகுமார் யாதவ் 22 பந்துகளில் 32 ஓட்டங்களை எடுத்தார், ரிங்கு சிங் 20 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களை எடுத்தார்.

பின்னர் வலுவான ஓட்ட இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணியால் 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 190 ஓட்டங்களை மாத்திரம் எடுக்க முடிந்தது.


நியூஸிலாந்து அணி சார்பில் அதிகபடியாக க்ளென் பிலிப்ஸ் 40 பந்துகளில் 6 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் அடங்கலாக 78 ஓட்டங்களை எடுத்தார்.

போட்டியின் ஆட்டநாயகனாக அபிஷேக் சர்மா தெரிவானார்.

இந்த வெற்றியுடன் 5 போட்டிகள் கொண்ட ரி- 20 தொடரில் இந்திய அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. இன்று வெள்ளிக்கிழமை ராய்ப்பூரில் இரண்டாவது ரி-20 போட்டி நடைபெறும்.

பெப்ரவரி 7 ஆம் திகதி இந்தியா மற்றும் இலங்கையில் தொடங்கும் ரி-20 உலகக் கிண்ணத்துக்கான ஆயத்தமாக இந்தத் தொடர் இரு அணிகளுக்கும் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## சிறந்த வீரர்களுக்கான தரவரிசை
# 2ஆவது இடத்தில் கோலி




ஐ.சி.சி ஒரு நாள் போட்டி துடுப்பாட்ட வீரர் தரவரிசையில் இந்தியாவின் கோலி இரண்டாவது இடத்திற்கு தள்ளப்பட்டார்.

சர்வதேச ஒருநாள் போட்டியில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.,) டுபாயில் வெளியிட்டது.

துடுப்பட்ட வீரர்கள் தரவரிசையில் இந்தியாவின் விராத் கோலி, 795 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருந்து 2 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். இவர், நியூசிலாந்து தொடரில் ஒரு சதம், ஒரு அரை சதம் உட்பட 240 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

இந்தியாவுக்கு எதிராக 2 சதம் உட்பட 352 ஓட்டங்கள் குவித்து தொடர் நாயகன் விருது வென்ற நியூசிலாந்தின் டேரில் மிட்சல் (845 புள்ளி), 'நம்பர்-1' இடத்துக்கு முன்னேறினார். இவர், 2 ஆவது முறையாக முதலிடத்தை கைப்பற்றினார். இதற்கு முன், கடந்த நவம்பரில் முதலிடம் பிடித்திருந்தார்.

மற்றொரு இந்திய வீரர் ரோகித் சர்மா (757) 4ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். இவர், நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் 61 ஓட்டங்கள் மட்டும் எடுத்திருந்தார்.

இந்தியாவின் சுப்மன் கில் (723) 5 ஆவது இடத்தில் நீடிக்கிறார்.

பவுலர் தரவரிசையில் ஆப்கானிஸ்தானின் ரஷித் கான் (710), 'ஆல்-ரவுண்டர்' பட்டியலில் ஆப்கானிஸ்தானின் அஸ்மதுல்லா உமர்ஜாய் முதலிடத்தில் நீடிக்கின்றனர். (நி)

## ரி-20 உலகக் கோப்பை
# வீட்டிலிருந்து பார்ப்பது வித்தியாசமான அனுபவம்
### ரோகித்சர்மா நெகிழ்ச்சி




2007 ஆம் ஆண்டு 20 ஓவர் உலகக் கோப்பை போட்டி அறிமுகம் ஆனதில் இருந்து ஒவ்வொரு உலகக் கோப்பைத் தொடரிலும் பங்கேற்று இருக்கிறேன். இந்த முறை அந்தப் போட்டியை வீட்டில் இருந்தபடி பார்ப்பது புதுமையாக இருக்கும்.

உலகக்கோப்பை போட்டியை தவறவிடும் போது தான், அதன் யதார்த்தத்தை முழுமையாகப் புரிந்து கொள்வீர்கள். அப்போது தான், உலகக் கோப்பை பயணத்தில் நீங்கள் ஒரு பகுதியாக இல்லை என்பதை உணர்வீர்கள் என ரோகித் சர்மா தெரிவித்தார்.

வெஸ்ட் இண்டீஸ் மற்றும் அமெரிக்காவில் கடந்த 2024 ஆம் ஆண்டில் நடந்த 9 ஆவது 20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி, தென் ஆபிரிக்காவை வீழ்த்தி மகுடம் சூடியது. அத்துடன் ரோகித் சர்மா சர்வதேச 20 ஓவர் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார். இந்த நிலையில் விரைவில் இந்தியாவில் 20 ஓவர் உலகக் கோப்பை போட்டி நடக்க இருப்பது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய நாடுகள் மீதான வரி அச்சுறுத்தல்

## -வாபஸ் பெற்றார் ட்ரம்ப்-



**(வோஷிங்டன்)**

**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கிரீன்லாந்து விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகள் மீது விதிக்க விருந்த வரி அச்சுறுத்தலைத் திரும்பப் பெற்றுள்ளார்.**

டென்மார்க் நாட்டிடமிருந்து கிரீன்லாந்தை அமெரிக்காவுடன் இணைக்கும் ட்ரம்பின் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்த எட்டு ஐரோப்பிய நாடுகள் மீது, பெப்ரவரி மாதம் முதல் 10 சதவீத வரி விதிக்கப்போவதாக ட்ரம்ப் அச்சுறுத்தியிருந்தார். தற்போது அந்தத் தீர்மானத்தை அவர் திரும்பப் பெற்றுள்ளார்.

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நேட்டோ தலைவர் மார்க் ரூட்டேவைச் சந்தித்த பின்னர், கிரீன்லாந்து மற்றும் ஆர்க்டிக் பிராந்தியம் தொடர்பாக ஒரு புதிய "ஒப்பந்தக் கட்டமைப்பு" உருவாக்கப்பட்டுள்ளதாக ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

சீனா மற்றும் ரஷ்யாவின் ஆதிக்கத்தைத் தடுக்க கிரீன்லாந்தை அமெரிக்கா கைப்பற்ற விரும்புவதாகக் கூறிய ட்ரம்ப், அதற்காகப் படைபலத்தைப் பயன்படுத்தப் போவதில்லை என உறுதியளித்துள்ளார்.

"நான் நினைத்தால் யாராலும் தடுக்க முடியாத அளவுக்கு பலத்தைப் பயன்படுத்த முடியும், ஆனால் அதை நான் செய்யமாட்டேன்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் வளர்ச்சி மற்ற நாடுகளுக்கு ஒரு முன்மாதிரியாக இருப்பதாகவும், அமெரிக்கா பொருளாதார ரீதியாக உயரும் போது மற்ற நாடுகளும் அதைப் பின்பற்றுவதாகவும் ட்ரம்ப் பெருமிதம் கொண்டார்.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆகியோருடன் தமக்கு மிகச் சிறந்த உறவு இருப்பதாகத் தெரிவித்துள்ளார். குறிப்பாக ஜி ஜின்பிங்கை "அதிசயமான மனிதர்" என அவர் புகழ்ந்து பேசியுள்ளார். (நி)

# ஈரான் அழிக்கப்படும் - ட்ரம்ப்
# அமெரிக்கா தீக்கிரையாகும் - ஈரான்

(வோஷிங்டன்)

"எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்த ஈரான் முயன்றால், அந்த நாட்டை உலக வரைபடத்தில் இருந்தே அமெரிக்கா அழித்துவிடும்" என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இது குறித்து ட்ரம்ப் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது: ஈரான் மீது தாக்குதல் நடத்துவது குறித்து எனது ஆலோசகர்களுக்கு மிகத் தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளேன்.



எனக்கு ஏதாவது நேர்ந்தால், ஈரான் என்ற ஒரு நாடு இந்தப் பூமியில் இருந்ததற்கான அடையாளம் இல்லாதபடி ஒட்டுமொத்தமாகத் துடைத்தெறியப்படும்" எனத் தெரிவித்தார்.

ட்ரம்பின் இந்தக் கருத்துக்கு ஈரான் ஆயுதப் படைகளின் செய்தித் தொடர்பாளர் ஜெனரல் அபுல்ஃபாஸல் ஷெகார்ச்சி அளித்த பதிலில், "எங்கள் தலைமை மதகுரு அயதுல்லா அலி கமேனிக்கு எதிராக அமெரிக்கா ஏதேனும் அத்துமீறலில் ஈடுபட்டால் அந்த கையை நாங்கள் வெட்டுவது மட்டுமல்லாமல், அமெரிக்காவின் உலகத்தையே தீக்கிரையாக்குவோம்" என எச்சரித்துள்ளார்.

ஈரானில் தற்போதைய மதசார்பு ஆட்சிக்கு எதிராக நடந்துவரும் உள்நாட்டுப் போராட்டங்களுக்கு அமெரிக்கா ஆதரவு அளித்து வருவதால், இருநாட்டுக்கிடையே பதற்றம் உச்சக் கட்டத்தை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# முகாம் மீது விழுந்த மண்மேடு

## பலர் மாயம் — நியூசிலாந்தில் துயரம்

(வெலிங்டன்)

நியூசிலாந்தின் வடக்குப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை பெய்த கனமழையால் ஒரு முகாம் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இதனால், பலர் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் மற்றும் மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

நியூசிலாந்தின் வடக்கு கடற்கரையில் உள்ள பிரபலமான சுற்றுலாத் தலமான மவுண்ட் மவுங்கானுயின் அடிவாரத்தில் அமைந்துள்ள முகாமே இந்த அனர்த்தத்துக்கு முகங்கொடுத்துள்ளது.

சம்பவ இடத்தில் இருந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வெளியேற்றப்பட்டதாகவும், அப்பகுதியில் எஞ்சியிருக்கும் யாரையாவது கண்டுபிடிக்க அவசர சேவைகள் செயற்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)






வவுனியாவில் புதிதாக அமைக்கப்பட்ட புவனேஸ்வரி அம்மா முன்பள்ளி கடந்த 19ஆம் திகதி திங்கட்கிழமை கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது. குறித்த முன்பள்ளியானது தொழிலதிபர் கே.பிரபாகரன் நிதிப்பங்களிப்பில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**படம் - வசந்தரூபன்**



பொற்பதி மக்கள் நலன்புரிச் சங்கத்தின் 7ஆம் ஆண்டு நிறைவு விழா அதன் தலைமைக் காரியாலயமான பொற்பதி குடத்தனையில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் க.பொ.த உயர்தரம் மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

**படம் - மகாலிங்கம்**



யாழ்.நீரிழிவுக் கழகத்தின் கோரிக்கைக்கு அமைவாக இலங்கை நீரிழிவுக் கழகத்தால் நீரிழிவு நோய்க்கான ஒரு தொகுதி இன்சுலின் ஊசி மருந்துகள் யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்திற்கு வழங்கப்பட்டன.

இவற்றை யாழ்.நீரிழிவுக் கழக உபதலைவர் திருமதி. ச.அம்பிகா, வைத்திய நிபுணர் அரவிந்தனிடம் கையளித்தார்.



கீரிமலை குழந்தைவேல் சுவாமிகள் அறநெறிப் பாடசாலையில் பொங்கல் விழாவும், சிரமதான நிகழ்வும் கடந்த 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.



தமிழக முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்திய நடிகருமான எம்.ஜி.இராமச்சந்திரனின் 109ஆவது பிறந்த தினம் கடந்த 17ஆம் திகதி சனிக்கிழமை யாழ். எம்.ஜி.ஆர் கோப்பாய் சுந்தரலிங்கம் குடும்பத்தின் ஏற்பாட்டில் கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி இராமச்சந்திரனின் சிலைக்கு முன்பாக இடம்பெற்றது.

**படம் - சிவசாந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசா விதிமுறைகளை மீறினால் வாழ்நாள் தடை!

## அமெரிக்கா செல்லும் இலங்கையர்களுக்கு எச்சரிக்கை




**(கொழும்பு)**

**அமெரிக்காவிற்கு B1/B2 சுற்றுலா விசாவில் செல்லும் இலங்கையர்கள், அங்குள்ள சட்ட திட்டங்களை முறையாகப் பின்பற்றுமாறு கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.**

இது தொடர்பாக அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், B1/B2 விசாவானது வணிகக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கும், ஒப்பந்தங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் மட்டுமே அனுமதி அளிக்கிறது.

இந்த விசாவைப் பயன்படுத்தி அமெரிக்காவிற்குள் எந்தவொரு வேலையிலும் ஈடுபட அனுமதி இல்லை. இது ஒரு சுற்றுலா மற்றும் குறுகிய கால வணிக விஜயத்திற்கான விசா மட்டுமே என்பதை தூதரகம் தெளிவுபடுத்தியுள்ளது.

அனுமதியின்றி வேலை வாய்ப்புகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதப் பணியில் ஈடுபடுவோர் உடனடியாக அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்படுவார்கள். இத்தகைய விதிமீறல்களில் ஈடுபடுவோர், எதிர்காலத்தில் மீண்டும் அமெரிக்காவிற்குள் நுழைவதற்கு நிரந்தரத் தடை விதிக்கப்பட வாய்ப்புள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையர்கள் அமெரிக்காவிற்குச் செல்லும் போது, தமது விசாவின் வகையையும் அதன் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளையும் தெளிவாகப் புரிந்திருக்க வேண்டும்.

வேலை தேடுபவர்கள் அல்லது பணியில் ஈடுபட விரும்புபவர்கள் அதற்குரிய முறையான பணி விசாவை பெற்றிருக்க வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் வலியுறுத்தியுள்ளது. (நி)

# 26 ஆம் திகதி முதல் நெல் கொள்வனவு ஆரம்பம்

(கொழும்பு)

எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் நெல் சந்தைப்படுத்தல் சபையினூடான நெற் கொள்வனவு ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் கே.டீ.லால் காந்த தெரிவித்துள்ளார்.

கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் அமைச்சு சார் ஆலோசனைக் குழுக்கூட்டம் பாராளுமன் றத்தில் நடைபெற்ற போதே அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

வன்னி உட்பட வடக்கு-கிழக்கில் பெரும்போக நெல் அறுவடை இடம்பெற்று வரும் நிலையில், நெல் சந்தைப்படுத்தல் சபையினூடாக நெற்கொள்வனவை விரைந்து ஆரம்பிக்குமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் முன்வைத்த கோரிக்கைக்குப் பதில் வழங்கும் போதே, அமைச்சர் கே.டீ.லால் காந்த இதனைத் தெரிவித்தார். (நி)

# நாமல் இந்தியா விஜயம்

(கொழும்பு)

இந்திய குடியரசு தின நிகழ்வுக்காக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஸ உள்ளிட்ட சில எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, அவர்கள் ஒடிஷா மாநிலத்திற்குப் பயணமாக வுள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி இந்தியக் குடியரசு தினம் கொண்டாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# 23,692 கிலோ போதைப்பொருள் கடந்த ஆண்டில் பறிமுதல்



(கொழும்பு)

அண்மைய வரலாற்றில் சட்ட அமுலாக்க அதிகாரிகளால் மிகப்பெரிய அளவிலான போதைப்பொருள் தொகை கடந்த 2025 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்டதாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான எஃப்.யு. வுட்லர் தெரிவித்தார்.

போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான தேசிய செயற்பாடு திட்டத்தின் முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுவதற்காக நேற்றுக் காலை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டில் ஹெரோயின், கஞ்சா, ஐஸ், ஹாஷிஷ் மற்றும் கொக்கெய்ன் உள்ளிட்ட மொத்தம் 10,871 கிலோ கிராம் போதைப்பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

அதேநேரம், 2025 ஆம் ஆண்டில் மொத்தம் 23,692 கிலோ கிராம் போதைப்பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (நி)




# சோலைநகர் பாலம் புனரமைக்கப்படுமா?

## ஏக்கத்துடன் காத்திருக்கும் மக்கள்

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட சோலைநகர் பாலம் அப்பகுதி மக்களின் போக்குவரத்திற்கு பெரும் பங்கு வகித்து வந்துள்ளது. கடந்த டித்வா புயலிற்கு முன்பே சிறிதளவாக சேதமடைத்திருந்த குறித்த பாலம் புயலின் போது ஏற்பட்ட கடும் அனர்த்தத்தால் பெருமளவு சேதமடைந்தது.


சோலைநகர் புதுமுறிப்பு மக்களின் பிரதான வாழ்வாதாரமாக விளங்கும் நெற்செய்கையிற்கு இப் பாலத்தால் செல்லும் வாய்க்காலூடாக 1000 இற்கும் மேற்பட்ட ஏக்கர் வயல் நிலங்களுக்கு நீர் கொண்டு செல்லப்படுகிறது.

தற்போது குறித்த பாலத்தின் பெரும் பகுதி சேதமடைந்திருப்பதால் வாய்க்கால் மூடப்பட்டு சிறுபோக நெற்செய்கைக்கு தேவையான நீரைக் கொண்டுசெல்ல முடியாது விவசாயிகள் சிரமத்திற்குள்ளாகின்றனர். இதனால் ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களும் தரிசு நிலங்களாக மாறும் அபாயம் ஏற்பட வாய்ப்புள்ளதுடன் மக்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாலம் சேதமடைந்திருப்பதால் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதிலும், நோயாளிகள் வைத்தியசாலைக்குச் செல்வதிலும் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். அறுவடை செய்யப்படும் விளை பொருட்களை சந்தைக்குக் கொண்டு செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

அனர்த்தம் நிகழ்ந்து நீண்டநாட்களாகியும் இது வரையில், புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

இது தொடர்பாக அதிகாரிகள் ஆக்கபூர்வமான வழிநடத்தலையும், உடனடித்தீர்வையும் மேற்கொள்வார்கள் என நாம் எதிர்பார்த்து காத்திருக்கின்றோம்.



**அன்பு வாசகர்களே!**

**உங்கள் பிரதேசங்களில் தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகளை 'குறைகேள் அரங்கு' இற்கு புகைப் படத்துடன் எழுதி அனுப்புங்கள்.**

"குறைகேள் அரங்கு",
ஆசிரியர் வலம்புரி,
இல.191 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

076 636 3378
valampurii@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்த புதிய சட்டங்கள் அவசியம்

## அமைச்சர் நளிந்த



(கொழும்பு)

அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய வகையில், மக்களைப் பாதிக்கும் விதமாக சமூக ஊடகங்களில் முன்னெடுக்கப்படும் பிரசாரங்களை ஒழுங்குபடுத்துவதற்குப் பொருத்தமான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஆயுர்வேத உற்பத்திகள் மற்றும் சில சிகிச்சை முறைகள் தொடர்பாக சமூக ஊடகங்களில் முன்னெடுக்கப்படும் பிரசாரங்களை, நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் ஒழுங்குபடுத்த முடியும் எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

எவ்வாறாயினும், மக்கள் பாதிக்கப்படும் வகையில் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கியதாக சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான சட்டம் நாட்டில் இல்லை என்றும், அவற்றை இயற்றுவதன் மூலம் இவ்வாறான நிலைமைகளைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி)

# 16.5 மில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கைது



(கொழும்பு)

சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட 165,200 வெளிநாட்டு சிகரெட் குச்சிகளை வைத்திருந்த குற்றச்சாட்டுக்காக 47 வயதான நபர் ஒருவர் வெல்லம்பிட்டி பகுதியில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சிகரெட் குச்சிகளின் பெறுமதியானது 16.52 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவம் மற்றும் ராஜகிரிய பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இணைந்து நடத்திய நடவடிக்கையின் போது இந்த கைது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லம்பிட்டி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி)

# எம்.பிக்களின் ஓய்வூதியம் இரத்து 4 மனுக்கள் தாக்கல்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தை ஒழிக்கும் சட்டமூலத்தை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் நான்கு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் நகலும் தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாக சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அரசியலமைப்பின் 121(1) பிரிவின்படி மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை இரத்து செய்வதற்கான சட்டமூலம் ஜனவரி 7 ஆம் திகதி நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் கலாநிதி ஹர்ஷன நாணயக்காரவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

சட்டமூலத்தை சவால் செய்யும் மனுக்களை சமர்ப்பிப்பதற்கு அந்த திகதியிலிருந்து 14 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதம் அடுத்த மாத இறுதியில் நடைபெற உள்ளது.

சட்டமூலம் இயற்றப்பட்டதும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் 512 பேரின் ஓய்வூதிய உரிமைகள் இரத்து செய்யப்படும். (நி)


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்-05.10.1943

மறைவு-20.01.2026

எமது பாடசாலையின் ஆசிரியர் திருமதி.சத்தியபாமா ஜெகதீசன் அவர்களின் அன்பு மாமியார்

தவராஜா இராசலட்சுமி

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(6626)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்

யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்.


# மின்சார சபை மறுசீரமைப்பு அடுத்த மாதம்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் நடைமுறையை எதிர்வரும் 30 நாட்களுக்குள் முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான அனைத்து வேலைத் திட்டங்களும் தற்போது இறுதி கட்டத்திலுள்ளதாக எரிசக்தி பிரதியமைச்சர் எம்.எம்.அர்கம் தெரிவித்தார்.

இந்த மறுசீரமைப்பை துரிதப்படுத்துவதற்கான செயலணி ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் தெரிவித்தார். (நி)


## வருடாந்த பொதுக்கூட்டம்

யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் -2026

காலம் :- 08.02.2026

நேரம் :- பி.ப 2.30 மணி

இடம் :- பாடசாலை பிரதான மண்டபம்

அனைத்து பழைய மாணவர்களையும் வருகை தருமாறு அழைக்கின்றோம்.

(C-4864)

செயலாளர், பழைய மாணவர் சங்கம்




## பணி நிலை ஓய்வு வாழ்த்து

எமது பாடசாலையில் உயிர்ப்பான சேவைபுரிந்து 21.01.2026 இல் ஓய்வு பெற்றுச் சென்ற எமது மதிப்பிற்குரிய ஆசிரியை

திருமதி. வனஜா பவானந்த சர்மா அவர்கள்

SLTS-I,B.A,PGDE



சேவை விபரம்

- கிளி/ஸ்கந்தபுரம் அ.த.க பாடசாலை 14.09.2005 – 21.03.2007
- யா/வண்ணை வைத்திலிங்கம் வித்தியாலயம் 22.03.2007 – 08.05.2007
- யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை 09.05.2007 – 06.09.2009
- யா/சங்கானை ஸ்தானை அ.த.க பாடசாலை 07.09.2009 – 27.06.2010
- கிளி/ஸ்கந்தபுரம் அ.த.க பாடசாலை 28.06.2010 – 02.01.2011
- வ/பெரியமடு அ.த.க பாடசாலை 03.01.2011 – 05.01.2011
- வ/கனகராயன்குளம் மகாவித்தியாலயம் 06.01.2011 – 13.02.2013
- யா/இணுவில் மத்திய கல்லூரி 14.02.2013 – 12.03.2015
- யா/வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம் 13.03.2015 – 16.03.2021
- யா/ புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயம் 17.03.2021–21.01.2026

இவரது உயர்வான சேவையினைப் பாராட்டுவதோடு ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:

ஆசிரியர் நலன்புரிக் கழகத்தினர், யா/புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயம்.



## மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

BEST WISHES

வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தில் மணிவிழாக்காணும் எங்கள் உதவிக் கல்விப் பணிப்பாளர்

கலைமாமணி

திரு.சங்கரப்பிள்ளை கிருபானந்தன்

(MA, BA (Hons), சிரேஸ்ட உளவளத்துணையாளர்)



வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் அளப்பரிய சேவையாற்றி (24.01.2026) மணிவிழாக் காணும் உதவிக் கல்விப் பணிப்பாளரின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டுவதுடன் ஓய்வுக் காலம் மென்மேலும் சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

(6620)

வாழ்த்துவோர் : ஊழியர் நலன்புரிச் சங்கம், வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

16th EDITION

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
# JAFFNA INTERNATIONAL TRADE FAIR

JITF 2026

23 24 25 JANUARY ஜனவரி

10.00 மு.ப - 8.00 பி.ப

Muttraweli Grounds (Next to Jaffna Fort) முற்றவெளி மைதானம் (யாழ் கோட்டைக்கு அருகில்)

# இன்று ஆரம்பம்

www.jitf.lk



## Message from Mr. N. Vethanayahan
## Governor - Northern Province

On the occasion of the 16th Jaffna International Trade Fair 2026, we extend our warmest greetings and best wishes to the organizers, exhibitors, and visitors.

As the 'Gateway to the North' this fair continues to be a beacon of economic resilience and transformation. We commend the Chamber of Commerce and Industries of Yarlpanam (CCIY) and LECS for their unwavering commitment to creating a platform where local SMEs can stand shoulder-to-shoulder with leading national private sector giants.

To our local entrepreneurs- Your innovation is the heartbeat of the Northern Province. To our national business leaders-Your partnership strengthens the fabric of our island's economy. May JITF 2026 be a resounding success, fostering new partnerships, driving sustainable growth, and paving the way for a prosperous future for all Sri Lankans.

We expect new business vistas are created beyond national boundaries. Wishing everyone a productive and successful trade fair!



## Message from Mr. Kulasingham Vaseekaran
## Chairman - Chamber of Commerce & Industries of Yarlpanam

On behalf of the Chamber of Commerce and Industries of Yarlpanam, it is my distinct honour and pleasure to extend the warmest of welcomes to you all at the Jaffna International Trade Fair 2026. This event stands as a powerful testament to the resilience, ingenuity, and boundless potential of our region. Jaffna, the historic and cultural capital of the North, is not only embracing a new era of peace and stability but is also emerging as a dynamic hub for commerce, innovation, and international partnership. This Trade Fair is more than an exhibition; it is a vibrant confluence of ideas, a showcase of excellence, and a platform for forging lasting economic relationships. Here, you will witness the diversity and quality of products and services from Jaffna, Sri Lanka, and beyond. You will meet entrepreneurs, industry leaders, and innovators who are shaping the future. Most importantly, you will find opportunities for trade, investment, collaboration, and mutual growth. The Chamber of Commerce and Industries of Yarlpanam is deeply committed to being the catalyst for this growth.

We believe that sustainable economic development is the cornerstone of a prosperous community, and we are dedicated to fostering an environment where businesses, both local and international, can thrive together. I extend my sincere gratitude to our exhibitors, sponsors, partners, and the organizing committee for their tireless efforts in making this event a reality. To our distinguished visitors and delegates from around the world, thank you for your interest in Jaffna's promise. Explore the possibilities, engage in meaningful dialogue, and discover the unique value that our region has to offer.

Let us use this gathering as a springboard to build a future of shared success and prosperity. May your participation be fruitful, your connections be strong, and your vision for the future be expanded.



## Message from Dr. V. K. Vignesh PhD.
## Chairperson of JITF 2026 / Executive Director
## Chamber of Commerce and Industries of Yarlpanam

On behalf of the Chamber of Commerce and Industries of Yarlpanam, it is my distinct honor to welcome you to the 16th Jaffna International Trade Fair (JITF 2026). The JITF has firmly established itself as a cornerstone of economic dialogue and development, transcending regional boundaries to impact the national landscape. Each year, we are proud to host a growing confluence of entrepreneurs, innovators, and investors from across Sri Lanka and beyond, fostering a dynamic environment for commerce and collaboration. The 16th edition underscored the Fair's pivotal role in elevating the profile of domestic producers, offering an unparalleled platform to showcase innovation, quality, and service excellence. JITF 2026 continues this mission, presenting the vast potential of the Northern Region and the nation. The expanding scale and enthusiastic participation each year confirm the Fair's status as an essential, traditional gathering for Sri Lanka's business community.

More than an exhibition, JITF is a multifaceted event integrating trade, technology, and culture. It serves as a critical nexus for active dialogue, forging direct connections between suppliers and buyers. These interactions are fundamental to driving sustainable economic growth, enhancing regional cooperation, and strengthening the networks that propel our collective prosperity.

I am confident that JITF 2026 will significantly contribute to deepening economic ties, bridging communication gaps, and highlighting the latest industry advancements. It stands as a testament to the vitality of our small and medium enterprises, the agro-industrial sector, and the innovative spirit that defines our progress. My best wishes to all exhibitors for a productive, successful, and rewarding experience at the Fair.



## Message from Mr. Arjun Dharmadasa
## Managing Director
## Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd

It is with great pride that I welcome you to the 16th edition of the Jaffna International Trade Fair (JITF) 2026, organized by Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd.

Over the past 15 years, JITF has grown into Northern Sri Lanka's largest and most influential trade exhibition, driving regional economic growth and business connectivity. The 15th edition attracted over 78,000 visitors, 5,000 invited business delegates, and 175 local and international companies across 250 stalls, reaffirming JITF's role as a trusted platform for trade, innovation, and investment. In 2026, JITF expands further with 400+ stalls, showcasing products, services, and technologies across multiple industries. Nearly 70% of visitors engage in direct business discussions, generating partnerships, distribution opportunities, and long-term market expansion for exhibitors.

Since its inception, JITF has played a vital role in SME development, women entrepreneurship, employment generation, and regional revitalization in the Northern Province. The exhibition has also contributed to growth in tourism and hospitality, supported by improving infrastructure, increasing visitor numbers, and ongoing government investment. The 2026 edition brings together exhibitors from Food & Beverage, Agriculture, Packaging, Apparel, Construction, Automobiles, IT, Financial Services, Plastics, Jewellery, Fishing, and Marine sectors, and more, alongside 2,500+ industry decision-makers shaping the region's future.

I extend my sincere appreciation to government authorities, sponsors, exhibitors, visitors, and especially the Chamber of Commerce and Industries of Yarlpanam for their continued support. As we mark this 16-year milestone, JITF stands as a powerful movement advancing trade, innovation, and opportunity, positioning Jaffna as a gateway for regional and international business. I invite you to engage, collaborate, and be part of this inspiring journey.

I wish you a successful and rewarding experience at JITF 2026.



## Message from Mr. Aasim Mukthar
## Chief Executive Officer
## Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd

The northernmost tip of the country, its capital, will be set alight for the 16th consecutive year with the commencement of the Jaffna International Trade Fair (JITF) 2026 from the 23rd to the 25th of January. The exhibition, which has become 'a must-attend' event among the citizens, businessmen, traders, and entrepreneurs of the North, will be held at the Muttraweli Grounds Jaffna, at the heart of the peninsula. The trade fair, which comprises all types of industry stalls, caters to various needs and services and has been considered the single most important focal point for a wide spectrum of businesses, investors, and citizens.

Organizing the 16th edition of JITF ensures that the northern region is still one of Sri Lanka's prime untapped markets in terms of trade and investment. This event is undoubtedly considered the most focused exhibition and trade fair in Jaffna.

I take this opportunity to welcome all exhibitors, delegates, and visitors to Jaffna while thanking and wishing all our valued sponsors and exhibitors the very best at JITF.

I also wish to convey my sincere thanks and gratitude to all stakeholders who have supported us immensely in making this year's JITF a success.



## Message from Mr. Gahanath Pandithage
## Group Managing Director / CEO - DIMO

DIMO is pleased to reaffirm its long-standing commitment to the Jaffna International Trade Fair (JITF) by serving as the Platinum Sponsor of its 16th edition. From its early beginnings, DIMO has consistently supported JITF, recognising its strategic role in stimulating regional economic growth and fostering enterprise across the Northern region.

DIMO's participation reflects our confidence in the collective progress of the North and reinforces our commitment to growing stronger together with Jaffna. It also aligns with DIMO's corporate purpose of fuelling dreams and aspirations within communities by enabling access to advanced technologies, sustainable solutions, and meaningful growth opportunities.

As Jaffna continues its development journey, DIMO remains steadfast in its role as a responsible and trusted partner, contributing to inclusive economic growth and long-term prosperity.

We extend our best wishes to JITF 2026 for continued success.

PLATINUM SPONSOR: DIMO

DIAMOND SPONSOR: NIPPON CEMENT

GOLD SPONSORS

SILVER SPONSORS

OFFICIAL SPONSORS

ORGANIZED BY: LECS

IN ASSOCIATION WITH: CCIY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

16th EDITION

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
# JAFFNA INTERNATIONAL TRADE FAIR

23 24 25 JANUARY ஜனவரி

10.00 மு.ப - 8.00 பி.ப

Muttraweli Grounds (Next to Jaffna Fort) முற்றவெளி மைதானம் (யாழ் கோட்டைக்கு அருகில்)

JITF 2026

# இன்று ஆரம்பம்

www.jitf.lk




### Message from Mr. Dashantha Udawatte
### General Manager - Group Marketing
### Tokyo Cement Company (Lanka) PLC
### Diamond Sponsor

The Jaffna International Trade Fair has, over the years, grown into one of the most significant trade exhibitions in Sri Lanka, playing a vital role in driving economic activity and creating new opportunities for businesses in the Northern Province and beyond. TOKYO CEMENT GROUP is proud to partner as the **Diamond Sponsor** of the Jaffna International Trade Fair 2026. This collaboration further strengthens our long-standing relationship with Lanka Exhibition and Conference Services and reflects our continued commitment to supporting the development of Sri Lanka's construction and industrial landscape. Trade fairs such as JITF serve as an important platform for enterprises of all sizes, fostering collaboration, encouraging innovation, and enabling direct engagement with customers and dealer partners. For TOKYO CEMENT GROUP, this event provides a valuable opportunity to connect closely with the Northern market while showcasing our latest product innovations and construction solutions.

As Sri Lanka's largest manufacturer of cement, concrete, and cement-based value-added products, we are pleased to present our comprehensive product portfolio at JITF 2026. Through advanced technology and continuous innovation, we remain committed to delivering superior quality solutions that meet the evolving needs of the construction industry. I extend my sincere appreciation to Lanka Exhibition and Conference Services for their dedication and efforts in organizing the Jaffna International Trade Fair 2026. I also congratulate all exhibitors and participants and wish the event every success. We warmly invite all visitors to explore the TOKYO CEMENT GROUP pavilion and experience the value we bring to nation-building.



### Message from Mr. Sasikaran
### Executive Director - LH Consortium (Pvt) Ltd
### Gold Sponsor

LH Consortium (PV) Ltd is proud to announce its continued commitment as a Gold Sponsor of the 16th Jaffna International Trade Fair (JITF) 2026. Since JITF's inception, LH Consortium has supported the event, recognizing its pivotal role in fostering regional economic growth, entrepreneurship, and the creation of strategic alliances that elevate the quality of life for Sri Lankans. Our corporate purpose - fueling the dreams and aspirations of communities - guides this involvement. By leading this initiative, we contribute to facilitating economic activity and delivering the latest technologies and solutions to the doorstep of our stakeholders. LH Consortium extends best wishes for JITF 2026 and for continued success in shaping a brighter future for all.

### Message from Browns Group
### Gold Sponsor

Browns Group, one of Sri Lanka's most trusted and diversified conglomerates with over a century of experience, continues to play a vital role in national development while expanding its footprint in the Northern region. Through its strategic participation at the Jaffna International Trade Fair, Browns reinforces its long-term commitment to empowering communities, strengthening industries, and shaping a sustainable future for Jaffna. The Agriculture Strategic Business Unit delivers modern farming machinery, implements, and irrigation solutions that enhance productivity, reduce labour dependency, and improve income stability for both small-scale and commercial farmers. Complementing this, the Heavy Machinery Strategic Business Unit supports regional development through construction and earthmoving solutions that enable faster infrastructure growth, job creation, and improved public services. Browns' Air Conditioning and Generator Strategic Business Units provide energy-efficient cooling and dependable power solutions for homes, businesses, farms, and essential services, ensuring comfort, continuity, and operational resilience. The Battery, Tyre, Fuel, and Mobility Services Strategic Business Units supports transportation and energy needs through automotive, motorcycle, and industrial batteries, tyre solutions, fuel distribution, and specialised hybrid and electric vehicle maintenance services.

Under its Pharma Strategic Business Unit, Browns offers comprehensive veterinary pharmaceutical solutions across the dairy, poultry, pet care, and aqua sectors, supporting animal health, farm productivity, and food security. Further strengthening its diversified offering, Browns delivers integrated engineering solutions, lubricants, general trading products such as power tools, hand tools, agricultural equipment, water management fittings, cleaning solutions, and consumer technology. Supported by island-wide dealer networks, e-commerce access, and robust after-sales services, Browns brings trusted expertise to drive long-term growth and uplift livelihoods across Northern Sri Lanka.



### Message from Mr. S C Weerasekera
### Group Director / Chief Operating Officer
### Capital Maharaja Group
### Gold Sponsor

The Industrial Hub of the Capital Maharaja Group comes to Jaffna with humility, gratitude, and a genuine sense of belonging. The people of Jaffna are respected across the nation for their loyalty, integrity, discipline, and inner strength-values that deeply reflect who we are. Over time, the trust you have placed in us has grown beyond business, forming a relationship grounded in mutual respect, honesty, and shared principles. In Jaffna, trust is built by keeping one's word, honoring relationships, and standing by one another through every stage of life, and these principles define the way we work. We do not see ourselves merely as manufacturers or suppliers; our ethos is guided by the belief that every product we make is meant for our own parents, children, siblings, relatives, and friends, and therefore we never compromise on quality at any cost.

We walk alongside you with responsibility and care, because the confidence you place in us is our greatest duty-one we carry with pride and sincerity. Guided by integrity, loyalty, and care, we are committed to protecting what matters most-health, safety, and the future-through safe, reliable PVC water pipe solutions, dependable electrical systems, trusted tools, and hygienic PE Plus water storage designed with the same care we would choose for our own families. Maharaja Group, we proudly support the aspirations of Jaffna by helping build new homes, strengthen livelihoods, and preserve generational legacies, delivering durable, high-performance and futuristic products that serve with the sincerity, trust, and reliability of a lasting relationship.

Our roots run deep in the Northern Peninsula, and our hearts remain firmly with its people. From the bottom of our hearts, we promise to serve Jaffna not only with quality products, but with honesty, loyalty, and genuine care. Together with the people of Jaffna, we look forward to building a future strengthened by trust, unity, and enduring bonds today and for generations to come.



### Message from Mr. Krishan Fernando
### Head of Sales - John Keells CG Auto (JKCG)
### Gold Sponsor

BYD makes a grand return to the Northern Province as part of this year's Jaffna International Trade Fair. John Keells CG Auto, the authorized distributor for BYD vehicles in Sri Lanka, is bringing a world-class driving experience back to Jaffna, featuring a diverse range of new energy vehicles that prioritize both performance and style.

From 23rd to 25th January 2026, at the Muttraweli Grounds, Jaffna, we invite you to explore the BYD ATTO 1, BYD SEALION 6 & the BYD SEALION 5 . Visit the BYD stalls at the Jaffna International Trade Fair for an immersive experience including test drives and expert advice. Whether you prefer the raw power of a PHEV or the smooth precision of an EV, the future is now in Jaffna.



### Message from Mr. Buddika Wickramasinghe
### Head of Sales - Xdao EV Sri Lanka
### Gold Sponsor

E-bikes are transforming the future of personal mobility, and XDAO Electric Vehicle Sri Lanka is pleased to showcase this evolution at the Jaffna International Trade Fair on 23rd-25th January 2026, marking our first-ever product display in Sri Lanka. As the Head of Sales of XDAO Electric, I am proud to be part of this important milestone under the trusted Sun Match Group, which brings over four decades of experience through our parent company, Sun Match Company (Pvt) Ltd, together with our sister company, Star Logistics. This strong foundation enables us to introduce reliable and innovative electric mobility solutions.

At XDAO Electric, we are committed to delivering high-quality e-bikes supported by dependable after-sales service and long-term customer care. We warmly invite all visitors to Stall Numbers 09 to 14 to experience our newly branded e-bikes and learn more about our vision for a greener transportation future in Sri Lanka.


PLATINUM SPONSOR: DIMO THE PERFECT PARTNER
DIAMOND SPONSOR: NIPPON CEMENT
GOLD SPONSORS: JKCG BYD XDAO
SILVER SPONSORS
OFFICIAL SPONSORS
ORGANIZED BY LECS IN ASSOCIATION WITH CCIY


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிட்ஸர்லாந்து சென்.கேலன் மாநில துணை முதல்வராக ஈழத்தமிழர்



சுவிட்ஸர்லாந்தின் சென் கேலன் மாநிலத்தின் துணை முதல்வராக ஈழத்தமிழர் துரைராஜா ஜெயக்குமார் தனது கடமையை பொறுப்பேற்றுள்ளார்.

ஈழத்தமிழரான இவர் நீண்ட காலமாக சுவிஸ் நாட்டில் உள்ள பசுமைக் கட்சியில் அங்கம் வகித்து வருகிறார். (நி)

# மோட்டார் சைக்கிள் விபத்து மூன்று பேர் படுகாயம்



(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயமடைந்து ள்ளனர்.

குடத்தனை வலிகண்டிப் பகுதியில் நேற்றைய தினம் வியாழக்கிழமை காலை இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

பருத்தித்துறையிலிருந்து மருதங் கேணி நோக்கி சென்று கொண்டி ருந்த மருதங்கேணி பிரதேச செயலக உத்தி யோகத்தர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் வலிக்கண்டி உள்வீதியால் பிரதான வீதிக்கு வந்து ஏறிய மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது. இதில் படுகாயமடைந்தவர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகளை மருதங் கேணி பொலிஸ் போக்குவரத்து பிரிவி னர் மேற்கொண்டுள்ளனர். (8-33-60)

## மகாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய புனரா வர்த்தன அஷ்டபந்தன சமர்ப்பண உத்த மோத்தம நவகுண்ட பக்ஷ பிரதிஷ்ட மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.20 மணிமுதல் 7.40 மணி வரையுள்ள சுப வேளையில் இடம் பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எதிர் வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணிமுதல் கர்மாரம்பக் கிரியைகள் இடம்பெற்று மறுநாள் சனிக் கிழமை காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறும்.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 24 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று பூர்த்தி நாளன்று 108 சங்காபிஷேகம் நடைபெறும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1996 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
11 இல் சூரி செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSC(IT),Engineer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16457

பிறப்பு:1993 இந்து
நட்சத்திரம்: கேட்டை
1 இல் செவ்
கி.பா:68
உயரம்:5'7"
தகைமை/தொழில்: A/L,பிரான்ஸ்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16458

பிறப்பு:1993 இந்து
நட்சத்திரம்: பூசம்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L, Business
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16460

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்:திருவாதிரை
கி.பா: 21
உயரம்: 5'11"
தகைமை:தொழில்-பட்டதாரி, Newzealand
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16461

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா:11
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: B Com, Manager
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16462

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 47
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Beautician
எதிர்பார்ப்பு:வெளிநாடு
தொ.இ: G/16487

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம் : மூலம்
7 இல் செவ்
கி.பா: 32
உயரம்: 5'
தகைமை/தொழில்: BA
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16488

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 11
உயரம்: 5'3"
தகைமை/தொழில் : BSC, MSC, QA
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16450

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா : 14 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில் : MA, DO
எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில்
தொ.இ: G/16495

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 26 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Diploma
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: G/16452

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இராசிபலன்

23.01.2026
தை 09, வெள்ளிக்கிழமை
பஞ்சமி பின்னிரவு 12.57 மணிவரை

பூரட்டாதி பிற்பகல் 2.13 மணிவரை
சுப நேரம் 6.36-8.06 மணிவரை
இராகுகாலம் 11.06-12.36 மணிவரை

சந்திராஷ்டமம்
மகம், பூரம்

வளவன்




வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், ஊர்மாற்றம், இட மாற்றம் என்பன ஏற்படலாம்.




புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், பயணங்களால் பலனுண்டு, உறவினர் வழியில் எதிர்பார்ப்புகள் கைகூடும்.




பொது வாழ்வில் சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், காரிய அனுகூலமுண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.




பொறுமையால் பெருமை காணும் நாள், வேலைச் சுமை கூடும், உடல் நலனில் கவனம் தேவை, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.




வழிபாட்டில் ஆர்வம் கூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு




பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு, ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.




செய் தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் நண்பர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், செயற்பாடுகளில் நம்பிக்கை கூடும், போசன சுகமுண்டு.




சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், பொது வாழ்வில் கௌரவம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.




கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும் , சிந்தனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு, புதிய பொறுப்புகள் வந்து சேரலாம்.

பொன்னை விட மதிப்பு மிக்கது விவசாயம் நடக்கும் மண் தான் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசக விழாவும் பொங்கல் நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய அலுவல்கள் திணைக்களம், நல்லூர் சங்கிலியன் மன்றம் ஆகியன இணைந்து நடத்தும் திருவாசக விழாவும் பொங்கல் நிகழ்வும் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளன.

சங்கிலியன் மன்றத்தில், நிலையத் தலைவர் வி. ஜனகன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய.அநுருத்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவர் எஸ்.சத்தியேந்திரன், கௌரவ விருந்தினர்களாக சி.தர்மகுலசிங்கம், தொழிலதிபர் க.செந்தூரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (8)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்து குடைசாய்ந்தது வான்

## மூவர் காயம்



(முறிகண்டி)

வேகக்கட்டுப்பாட்டை இழந்து வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து நேற்றுக் காலை கிளிநொச்சி பரந்தன்- பூநகரி வீதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீதி ஊடாக கிளிநொச்சி நோக்கி பயணித்த வான் கட்டுப்பாட்டை இழந்து குடமுருட்டி பாலத்தில் மோதி குடைசாய்ந்துள்ளது.

விபத்திற்குள்ளான குறித்த வாகனத்தில் பயணித்த மூவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (8-100-104)

# வடமாகாண விவசாயக் கண்காட்சி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய வளாகத்தில் எதிர்வரும் 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் "கால நிலை சவால்களை எதிர்கொண்டு நிலைபேறான விவசாயத்தை நோக்கி" எனும் தொனிப் பொருளிலான வட மாகாண விவசாயக் கண்காட்சி காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இடம்பெறவுள்ளது.

வடமாகாண விவசாய அமைச்சின் வழிகாட்டலின் கீழ் வட மாகாண விவசாயத் திணைக்களமானது மத்திய விவசாயத் திணைக்களம், யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாயத்துடன் தொடர்புடைய பீடங்கள், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், சுதேச மருத்துவ திணைக்களம், தொழில்துறைத் திணைக்களம், தென்னைப் பயிர்ச் செய்கை சபை, பனை அபிவிருத்திச் சபை மத்திய சுற்றாடல் அதிகாரசபை, இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை, கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை, தேசிய அறு வடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனம், வங்கிகள், விவசாய உற்பத்திகள் மற்றும் பெறுமதி சார் உற்பத்தி ஏற்றுமதியாளர்கள், விவசாயத்துடன் தொடர்புடைய தனியார் கம்பனிகள், தனியார் நாற்று மேடையாளர்கள், சமூக மட்ட அமைப்புக்கள் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து இக் கண்காட்சியை ஒழுங்கமைத்துள்ளது.

குறித்த கண்காட்சியில் அனைவரும் பங்கு பற்றி பயன்பெறுமாறு முல்லைத்தீவு பிரதி விவசாயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (8)

# நட்புக் கொள்ளல்



முனைவர் ச.மனோன்மணி

மனிதன் தனது தனிமையைப் போக்க இன்னொருவருடன் இணைந்து பழக விரும்புகிறான். அந்த இணைப்பினை "நட்டல்" என வள்ளுவர் கூறியுள்ளார். இச்சொல் நட்பு என்ற குணப் பெயராகவும் வழங்கப்படுகிறது.

ஒருவரோடு நட்புக் கொள்ள விரும்புவதற்கு அவருடைய நல்ல குணவியல்புகளே காரணமாகும். "தோழமை" என்ற ஒரு சொல்லும் ஒத்தவர்கள் நட்பாக இருப்பதை உணர்த்தும் சொல்லாகும். பேச்சுவழக்கில் இன்றும் இச் சொல் பெரு வழக்காக உள்ளது. தோழமை என்பது மனிதரோடு மட்டுமன்றி ஏனைய உயிரினங்களோடும் பழகும் நிலையையும் விளக்கி நிற்கிறது.

பாரதியார் பாப்பாப்பாட்டிலே "வாலைக் குழைத்து வரும் நாய்தான் அது மனிதருக்குத் தோழனடி பாப்பா" என்று இக்கருத்தை மிகவும் எளிமையாக விளக்கியுள்ளார்.

குழந்தைப் பருவம் விலங்குகளோடு நட்புக் கொண்டு விளையாடும் பருவமாகும். குறிப்பாக வீட்டுவிலங்குகளோடு குழந்தைகள் நட்பு நிலையில் விளையாடுவர். பசு, நாய், பூனை, ஆடு போன்ற வீட்டில் வளரும் விலங்குகளோடு குழந்தை மொழியிலே உரையாடி மகிழ்வர். தாம் நாள் தோறும் காண்கின்ற காகம், கிளி, மைனா, குயில், செண்பகம் போன்ற பறவைகளோடு உரிமையுடன் காக்கா அண்ணா, கிளியக்கா, மைனாக்கா, குயிலக்கா, செண்பகம் மாமி என உறவுப் பெயரிட்டு விளையாடுவர். இந்த நிலையையே பாரதி பாடலில் பதிவு செய்துள்ளார். இத் தோழமை நட்பின் ஒரு வகையாகத் தமிழரிடையே நீண்ட காலமாக நிலவி வருகிறது.

மனிதனுடைய வளர்ச்சி நிலையில் பள்ளிப்பருவத்தில் நட்பின் பங்கு விரிவடைகிறது. பள்ளித் தோழர்கள் எனப் பலரோடு நட்புக் கொள்ளும் வாய்ப்புக்கிடைக்கிறது.

கல்விப்பயிற்சி பற்றியும் பிறவற்றைப் பற்றியும் கலந்துரையாட நட்புத் துணை செய்கிறது. அந்த நட்பு வாழ்நாள் முழுவதும் தொடரும் ஆழமான நட்பாகவும் அமைந்துவிடுவதுமுண்டு. எனினும் பள்ளிப் பருவத்து நட்பை ஆராய்ந்து செயற்பட வேண்டும். வள்ளுவர் நட்பு ஆராய்தல் பற்றி விளக்கமாகக் கூறியுள்ளார். ஆராய்ந்து நட்புக் கொள்ளாவிடின் இறுதி வரை துன்பம் அடைய நேரிடலாம். இறுக்கமான நட்பை வள்ளுவர் கேண்மை எனக் குறிப்பிட்டுள்ளார். நட்பை அவர் விளக்கும் போது வருமாறு கூறியுள்ளார். முகம் மலரும்படி உரையாடுவது நட்பு அன்று. ஒருவருடைய உள்ளம் மகிழும் வகையில் உரையாடுவதே நட்பாகும். "ஒருவர் நட்போடு பழகுவது உண்மையாக இருக்க வேண்டும். உண்மையான நட்பு நிலையை உணர்வதற்கு வள்ளுவர் மிக விளக்கமான எடுத்துக்காட்டு ஒன்றைக் குறிப்பிட்டுள்ளார்.



## வெள்ளி நற்சிந்தனை 23

ஒருவருடைய இடுப்பிலிருந்து ஆடை கழரும் போது அவருடைய கை எவ்வாறு விரைவாகச் செயற்பட்டு அதைத் தடுக்கிறது. அது போலவே நாம் நட்புக் கொண்டவருக்கு ஒரு இடர் ஏற்படும் போது விரைந்து சென்று அவரை அதிலிருந்து காக்க வேண்டும்.

நட்பின் வகைப்பாட்டில் "தொடர்பு" என்ற ஒரு நிலையையும் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். அதனைப் "பண்புடையாளர் தொடர்பு" என அழகாக வரையறை செய்துள்ளார். எமக்கு மூத்த பண்பாளர்களுடன் நட்புக்கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தால் அதை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஏனெனில் அவர்களோடு நட்பு கொண்டால் நாள்தோறும் நல்ல நூல்களைப் பயிலும் நன்மையைப் பெறலாம். இது பெரியவர்களுக்கும் எமக்குமிடையே ஒரு சமநிலையைத் தருவதல்ல. அவர்கள் தொடர்பால் நாம் பெறும் நன்மையையே விளக்கி நிற்கிறது. அதனால் "தொடர்பு" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீண்ட காலம் நட்புடன் இருப்பவர் அந்த நட்பு நிலையில் என்ன செயற்பாட்டைச் செய்ய வேண்டும் என்பதையும் நன்குணர்ந்திருக்க வேண்டும். எம்மோடு நட்புப்பூண்டவருடன் சிரித்து மகிழ்வது மட்டும் நட்பின் இலக்கு அன்று, அவர் ஒரு பிழை செய்யும் போது அதை அவரிடம் எடுத்துக் கூறி, அவரை நன்னெறிப் படுத்துவதும் நட்பின் இலக் காகும்.

நட்பின் வகையில் தீயநட்பு என்றும் இடும்பைத்தரும். இன்றைய இளைய தலைமுறையின் நட்பு நிலையில் பல தீய செயற்பாட்டைச் செய்வதற்குத் தீய நட்பே காரணம். விளையாட்டாகச் செயற்படும் துணையாக நட்பு இருக்கக் கூடாது.

குழந்தைப் பருவத்திலே பல்வேறு உயிரினங்களோடு நட்புப் பாராட்டும் போது பெற்ற அறிவு என்றும் பயன்பட வேண்டும். காலம், இடம், வலி அறிந்து செயற்பட வல்ல நண்பர்களே நீண்ட நாள் நட்புக் கொண்டிருப்பர். பண்டைத் தமிழிலக்கியங்கள் உண்மை நட்புப்பற்றிப் பல பதிவுகளைச் செய்து வைத்துள்ளன. நட்பில் விரிசல் ஏற்படாது உறுதியாக இருக்க வேண்டும்.

பிறர் நலம் பேணும் பண்புடைமை நட்புக்கு அணியாகும். மேலும் இன் சொல்லும் நட்பின் வெளிப்பாடுகள் உள்ளத்தால் நட்பு பாராட்டுபவர் உலகத்தால் பாராட்டப் படுபவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 962



"ஐயா! அப்படி ஏதாவது விபரீதம் நேர்ந்துவிடப் போகிறதென்று எண்ணித் தான் இளைய பிராட்டியும் முதன்மந்திரியும் என்னை அவசரமாக அனுப்பி வைத்தார்கள். ஆனால் அவர்கள் கடம்பூருக்குப் போக வேண்டாம் என்று சொன்னதைத் தாங்கள் கேட்கவில்லை."

"வல்லவரையா! இளைய பிராட்டியும் முதன்மந்திரியும் மிக மிக அறிவாளிகள் தான். ஆனால் விதியை அவர்களால் கூடத் தடுக்க முடியாது அல்லவா? அருள்மொழிவர்மனைப் பற்றிச் சோதிடர்கள் சொல்லியிருப்பதையெல்லாம் உண்மையாக்குவதற்காகவே விதி என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கிறதோ என்னமோ, யார் கண்டது? வல்லவரையா! கந்தமாறன் என் பின்னாலிருந்து அம்பை விட்டானே? உண்மையில் அவன் கரடியைக் குறிப் பார்த்து விட்டானா? என்னைக் குறி பார்த்து விட்டானா? நீ கவனித்தாயா?"

"நான் கவனிக்கவில்லை, ஐயா! ஆனால் கந்தமாறன் அத்தகைய துரோகம் செய்யக் கூடியவன் என்று நான் ஒரு நாளும் ஒப்புக் கொள்ளமாட்டேன். வீட்டுக்கு வந்த விருந்தாளியை, அதிலும் சக்கரவர்த்தியின் குமாரனைப் பின்னாலிருந்து அம்பு எய்து கொல்லக் கூடியவனா கந்தமாறன்? அவனுடைய அறிவுக் கூர்மையைப் பற்றி எனக்கு அவ்வளவு உயர்ந்த அபிப்பிராயம் இல்லை தான். முதுகில் குத்தப்பட்டு உணர்வற்றுக் கிடந்தவனை நான் தூக்கிக் கொண்டு போய்க் காப்பாற்றினேன். கண் விழித்ததும் என்னைப் பார்த்தபடியால் நான்தான் அவனைக் குத்தியதாக எண்ணிக் கொண்டான். அப்போது அவன் என் பேரில் கொண்ட பகைமை இன்னும் மாறவில்லை. ஆனால் அவனுடைய புத்தி கொஞ்சம் கட்டையாயிருந்தாலும், துரோக சிந்தையுள்ளவன் அல்ல!"

"நண்பா! ஒரு அழகிய பெண்ணின் மோகனாஸ்திரத்துக்கு எவ்வளவு சக்தியுண்டு என்று எனக்குத் தெரியாது. எவ்வளவு நல்லவனையும் அது துரோகச் செயல் புரியச் செய்துவிடும்"

"ஐயா! பெண்களின் மோகன சக்தியைப் பற்றி நானும் சிறிது அறிந்துதானிருக்கிறேன். அதனால் நான் ஒரு நாளும் துரோகியாகி விடமாட்டேன்"

"ஆகா! மணிமேகலை நல்ல பெண், உன்னைத் துரோகமான காரியம் செய்யும்படி ஏவமாட்டாள்"

"நான் மணிமேகலையைச் சொல்லவில்லை பூரண சந்திரனைப் பார்த்த கண்களுக்கு மின்மினி கவர்ச்சிகரமாகத் தோன்ற முடியுமா?"

"பூரண சந்திரன் என்று யாரைக் குறிப்பிடுகிறாய்?"

"இளவரசே! கோபிக்க வேண்டாம் பழையாறை இளைய பிராட்டியைத் தான் சொல்லுகிறேன்"

"அடே! அதிகப் பிரசங்கி! உலகிலுள்ள மன்னாதி மன்னர்கள் எல்லோரும் குந்தவையின் கைப் பிடிக்கத் தவம் கிடக்கிறார்கள். அத்தகைய என் சகோதரியை நீ மனத்தினாலும் நினைக்கலாமா?"


"ஐயா! பூரண சந்திரனுடைய மோகனத்தையும் தண்ணொளியையும் பூலோக சக்கரவர்த்திகளும் பார்த்து அனுபவிக்கிறார்கள் ஏழை எளியவர்களுந்தான் நிலவில் நின்று களிக்கிறார்கள். அவர்களை யார் தடுக்க முடியும்?"

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நல்ல உணவு



பெருந்துறவியான "குரு நானக்" அவர்கள் திடீரென்று ஓர் ஊருக்கு வருகை தந்தார். ஊர் மக்கள் எல்லோரும் அவரை கண்டு வணங்குவதற்காகச் சென்றார்கள்.

அந்த ஊரிலிருந்த செல்வன் ஒருவன் "குருநானக்கிற்கு நல்ல முறையில் விருந்திட வேண்டும்" என்று நினைத்தான். வீட்டில் அறுசுவை உணவு வகைகளைச் சமைக்கச் சொன்னான்.

அவற்றை எடுத்துக் கொண்டு நேராகக் குருநானக்கிடம் சென்றான். அவர் முன் அவற்றை வைத்து, "ஐயா! தாங்கள் இந்த எளியவனின் வீட்டு உணவை உண்ண வேண்டும்" என்று பணிவாக வேண்டினான்.

அதே சமயம் ஏழை உழவன் ஒருவன் தன் வீட்டிலிருந்து காய்ந்து போன இரண்டு ரொட்டிகளை அவர் உண்பதற்காகக் கொண்டு வந்தான். குருநானக் அந்த உழவனிடமிருந்து ரொட்டிகளை வாங்கி உண்ணத் தொடங்கினார்.

செல்வனால் இதைத் தாங்க முடியவில்லை. "ஐயா! தாங்கள் உண்ண வேண்டும் என்பதற்காக மிகவும் முயன்று வகைவகையான சுவைமிக்க உணவு வகைகளைக் கொண்டு வந்துள்ளேன். ஆனால் தாங்களோ உப்பு சப்பற்ற ரொட்டியைச் சாப்பிடுகின்றீர். இது நியாயமா?" என்று கேட்டான்.

உடனே குருநானக் அந்தச் செல்வனின் உணவில் ஒரு கைப்பிடி எடுத்து அதைப் பிழிந்தார். அதிலிருந்து சிவப்பு இரத்தம் சொட்டுச் சொட்டாகக் கீழே விழுந்தது. அதே போல உழவனின் ரொட்டியையும் பிழிந்தார். உள்ளிருந்து சொட்டுச் சொட்டாகப் பால் விழுந்தது. இதைக் கண்டு எல்லோரும் வியப்பு அடைந்தனர்.

குருநானக் செல்வனைப் பார்த்து, "நீ கொண்டு வந்தாயே அந்த உணவு, அது பிறரை ஏமாற்றியும் உழைப்பை உறிஞ்சியும் சம்பாதித்தது. ஆகவே அது பாவ உணவாக உள்ளது. அதனால் பிழிந்ததும் இரத்தம் வந்தது. இந்த ஏழை உழைத்து ஈட்டியதால் இந்த ரொட்டி நல்ல உணவாக உள்ளது. ஆகவேதான் இதிலிருந்து பால் வந்தது.

எனக்கு உணவு வகைகளை விட அது நல்ல உணவா என்பதுதான் இன்றியமையாதது. நான் ஏன் உன் உணவை உண்ணவில்லை என்பது இப்பொழுது தெரிகிறதா?" என்று கேட்டார்.

செல்வன் தலை கவிழ்ந்தபடி இனிமேல் தான் நேர்மையாக வாழ்வதாகச் சொல்லிக் குருநானக்கிடம் விடை பெற்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயமரியாதையின் விழிப்புணர்வு நம்மிடம் இருக்கும்போதே மற்றவரிடமும் அதை உணர முடியும். - அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## எவரும் எப்படியும் எதுவும் எழுதலாம் என்றானபோது...

யாகாவராயினும் நாகாக்க...
என்றார் வள்ளுவர்.

எந்த அறத்தைக் காப்பாற்றாவிட்டாலும் நாவைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். இங்கு நா காக்க என்பது பேசுகின்ற வார்த்தைகளை மட்டும் குறிக்கவில்லை.

மாறாக நாவின் உச்சரிப்பினூடு எழுதப்படுகின்ற சொற்களும் அதற்குள் அடங்கும்.

ஆக, பேசுவதும் எழுதுவதும் அறம் சார்ந்து அமைய வேண்டும். இங்கு எப்படியும் எதுவும் கதைக்கலாம். எப்படியும் எதுவும் எழுதலாம் என்ற மனப்பாங்கு ஏற்பட்டுவிட்டால், இந்த உலகம் தாங்காது என்பதை எச்சரிக்கும் பொருட்டே யாகாவராயினும் நாகாக்க என வள்ளுவன் கூறிவைத்தான்.

ஆம், அண்மையில் கேரளாவில் நடந்த ஒரு சம்பவம் அகண்ட பாரதத்தைக் கடந்து, உலகம் முழுவதிலும் அதிர்வை ஏற்படுத்தியுள்ளது.

அந்தச் சம்பவம் இதுதான். கேரளாவில் ஓர் இளம் பெண் பேருந்து வண்டியில் பயணம் செய்கிறார். அவருக்கு அருகில் 42 வயதான தீபக் என்பவர் பயணிக்கிறார். பேருந்து ஓடுகின்ற வேளையில் ஒரு சில சந்தர்ப்பங்களில் தீபக்கின் முழங்கை குறித்த இளம் பெண்ணில் தொட்டு விடுகிறது.

எனினும் தீபக்கின் பயணிப்பில் எந்தச் சலனமும் இருக்கவில்லை. ஆனால் குறித்த இளம் பெண் தனது கையடக்கத் தொலைபேசியில் தீபக்கின் கை தன்னில் முட்டுவதை ஒளிப் பதிவு செய்கிறார். அப்போது கூட அந்த நபர் பிரஸ்தாப இளம் பெண்ணைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

பயணம் முடிவுற்றதும் குறித்த இளம் பெண் தனது முகநூலில் தீபக் தன்மீது அங்க சேட்டை விட்டதாகவும் ஆண்களின் இழிநிலை இதுதான் என்றும் பதிவேற்றம் செய்ய; கருத்துக்களை முன்வைக்கின்ற ஒரு கூட்டம் சரி, பிழை என்ற நியாயங்களின் தேடல்களுக்கு அப்பால், தீபக்கை கண்டபாட்டில் திட்டித் தீர்த்து கேவலமாக எழுதித் தள்ளியது.

ஏதும் அறியாத தீபக் தன்னைப் பற்றி முகநூலில் வெளிவந்ததை அறிந்து மனம் உடைந்து போய் தன்னுயிரை மாய்த்துக் கொண்டார். அருமந்த ஓர் உயிரின் இழப்புக்குப் பின்னர், குறித்த பெண் தனது முகநூலில் செய்த பதிவேற்றம் தன்னைப் பிரபலப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது என்ற உண்மை தெரியவந்தது.

தவிர, பிரஸ்தாப பெண் கூறுவதுபோல தீபக்கின் கை தற்செயலாக அந்தப் பெண்ணில் முட்டுப்பட்டதேயன்றி, அதற்குள் எந்த விரசமும் இல்லை என்பதும் உறுதியானது.

இதுதான் என்றால் அந்தப் பெண் தனது முகநூலில் பதிவேற்றம் செய்த காணொளிக்கு கருத்துப் பகிர்ந்தவர்களின் வன்மமான வார்த்தைகளே தீபக் தன்னுயிரை மாய்ப்பதற்கு மூலகாரணமாயிற்று என்பது மனிதநேயமிக்கவர்களின் கருத்தாகும்.

என்ன செய்வது எவரும் எப்படியும் எதுவும் எழுதலாம் என்ற நிலைமை வந்துற்றபோது, மானத்தை உயிரென மதிப்பவர்கள் மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்... என்ற நிலைக்கு வந்து விடுகின்றனர்.

ஓர் அருமந்த உயிரைப் பறித்த அந்தப் பெண் இப்போது சிறையில். ஆக எதுசார்ந்து கருத்துக்களை முன்வைப்பதாயினும் அதில் அறமும் பண்பும் நியாயமும் உயரிய சிந்தனையும் இருக்கட்டும். இதைத் தயவு செய்து அனைவரும் பின்பற்றுங்கள். கர்மாவை சேர்த்து விடாதீர்கள்.

## கிவுல் ஓயாத் திட்டத்துக்கு அநுர அரசும் அங்கீகாரம்
## எதிர்வினை ஆற்றத் தயாராகிறது தமிழர் தரப்பு

*(யாழ்ப்பாணம்)*

தமிழரின் பூர்வீக இனப் பரம்பலையே மாற்றியமைக்கக் கூடிய "கிவுல் ஓயா" நீர்ப்பாசனத் திட்டத்தை மீள அமுல்படுத்த ஜனாதிபதி அநுர தலைமையிலான அமைச்சரவையும் எடுத்துள்ள முடிவுக்கு எதிராக ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து பாரிய போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சி அறிவித்துள்ளது.

இது குறித்து கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று விடுத்துள்ள அறிக்கையில்,

கடந்த திங்கட்கிழமை 20ஆம் திகதி அமைச்சரவை கிவுல் ஓயாத் திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இந்தத் திட்டம் எப்படியாக இனப்பரம்பலை மாற்றியமைக்கும் என்றும் தமிழ் மக்களின் உரிமைகளை எந்த அளவுக்குப் பாதிக்கும் என்பதையும் எமது பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சத்தியலிங்கம் நேற்று பாராளுமன்றத்தில் தெளிவாக விளக்கியுள்ளார்.

அத்துடன் இந்தத் திட்ட அமுலாக்கலைத் தடுக்கும் வகையில் பாரிய எதிர்ப்புப் போராட்டங்களை நாம் நடத்தவுள்ளோம்.

இந்தப் போராட்டங்களில் எம்மோடு இணைந்து கொள்ளுமாறு மற்றைய கட்சிகளையும் கேட்டுக்கொள்கின்றோம்.

அடுத்துவரும் நாட்களில் இது சம்பந்தமான கலந்துரையாடல்களை வவுனியாவில் நாம் நடத்தவுள்ளோம்.

இதில் கலந்துகொண்டு உங்களது கருத்துக்களையும் பகிர்ந்து இந்தப் போராட்டங்களுக்கு வலுச்சேர்க்குமாறு சகலரையும் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது. (ம-7)

## பிரஜாசக்தி அமைப்பின் சிபாரிசுகள் இனிச் சபையில் செல்லுபடியாகாது
### சாவகச்சேரி பிரதேசசபை அதிரடித்தீர்மானம்

*(சாவகச்சேரி)*

உள்ளூராட்சி சபைகளின் சுயாதீனத் தன்மையைப் பாதிக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் பிரஜாசக்தி உள்ளிட்ட வெளிவாரித் தலையீடுகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்து, சாவகச்சேரி பிரதேச சபையில் நேற்று கொண்டுவரப்பட்ட பிரேரணை உறுப்பினர்களின் அமோக ஆதரவுடன் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சுயலாப கட்சி அரசியல் செய்யும் உள்நோக்கோடு கிராமந்தோறும் பிரஜாசக்தி என்ற பெயரிலான அமைப்பு உருவாக்கப்பட்டு வருவதை இச்சபை வன்மையாகக் கண்டிக்கின்றது. சாவகச்சேரி பிரதேசசபையின் நிதி மற்றும் நிறைவேற்று நிர்வாக விடயங்களில் தலையீடு செய்யும் விதமாகப் பிராஜாசக்தி என்ற அமைப்பின் மூலம் செய்யப்படும் எந்தவிதமான சிபாரிசுகள், முன்மொழிவுகள் மற்றும் ஆலோசனைகளை நிராகரிப்பது என்று குறித்த பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய சபை நடவடிக்கையில் கலந்துகொண்டிருந்த 24 உறுப்பினர்களில் தேசிய மக்கள் சக்தியைப் பிரதிநித்துவப்படுத்தும் ஆறு உறுப்பினர்கள் தவிர அனைவரும் குறித்த பிரேரணைக்கு ஆதரவளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பொலிஸாருக்கு 500 ரூபா
## இலஞ்சம் கொடுக்க முயன்ற சாரதி கைது

கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் நேற்று வியாழக்கிழமை (22) வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்கு இலஞ்சம் வழங்க முயன்ற டிப்பர் வாகனச் சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி குற்றத்தடுப்புப் பிரிவினர பரந்தன் பகுதியில் வழமையான வீதிச் சோதனைகளில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது அந்த வீதியூடாக மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனம் ஒன்றை வழிமறித்த பொலிஸார், அதனைச் சோதனை செய்ய முற்பட்டுள்ளனர்.

இதன்போது குறித்த டிப்பர் சாரதி பொலிஸாருக்கு 500 ரூபா பணத்தை இலஞ்சமாகக் கொடுக்க முற்பட்டுள்ளார். கடமையிலிருந்த பொலிஸார் அந்த இலஞ்சப் பணத்தை ஏற்க மறுத்ததுடன் நேர்மையான முறையில் செயற்பட்டு சாரதியைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சாரதியிடமிருந்து இலஞ்சமாகக் கொடுக்க முயன்ற பணம் மற்றும் மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனம் என்பன கிளிநொச்சி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரையும் பறிமுதல் செய்யப்பட்ட சான்றுப் பொருட்களையும் இன்று (23) கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-7,316)

## மானிப்பாய் மருதடியில் இலவச பற்சிகிச்சை

*(மானிப்பாய்)*

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தினரால் முன்னெடுக்கப்படும் அறப்பணிகளில் ஓர் அங்கமாக இன்று (23) வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணி தொடக்கம் 5.30 மணிவரை இலவச பற்சிகிச்சை முகாமானது ஆலய கல்விக்கூடத்தில் இடம்பெறவுள்ளது.

சங்கானைப் பிரதேச வைத்தியசாலை பற்சிகிச்சை நிபுணரின் பங்குபற்றலுடன் இச்சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதேவேளை வழமை போன்று பொது வைத்தியர் மாலை 5.15 மணி முதல் 6.15 மணிவரை நோயாளிகளைப் பார்வையிட்டு இலவச ஆலோசனைகளையும் தேவைப்படின் இலவச மருந்துகளையும் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நடுங்கும் மலைநாடு சில்லென்ற நுவரெலியா

*(நுவரெலியா)*

மத்திய மலைநாட்டின் பல பகுதிகளில் கடந்த சில தினங்களாகக் கடும் குளிருடனான வானிலை நிலவிவரும் நிலையில் நுவரெலியாவில் நேற்று(22) அதிகாலை மிகக் குறைந்த வெப்பநிலை பதிவாகியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் தரவுகளின்படி, நுவரெலியா நகரின் வெப்பநிலை 3.5° செல்சியஸ் ஆகக் குறைந்துள்ளது. இது அண்மைய காலப்பகுதியில் நுவரெலியாவில் பதிவான மிகக் குறைந்த வெப்பநிலை எனத் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை பண்டாரவளையில் 11.5° செல்சியஸ், பதுளையில் 15.1° செல்சியஸ் மற்றும் கட்டுகஸ் தோட்டையில் 15.9° செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலைகள் பதிவாகியுள்ளன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு 04

என்.சொக்கன்

வில்லியம் டொனொவன் நம் ஊரில் இருந்திருந்தால், அவருக்கு விக்கிரமாதித்தன் என்று பெயர் வைத்திருப்பார்கள். தன் முயற்சியில் சற்றும் தளராமல், கோப்புகளைத் தூக்கிக்கொண்டு அரசாங்கப் படிகளில் ஏறத் தொடங்கினார் அவர்.

"ஐயா, ஆட்சியாளர்களே, நான் சொல்வதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்கள். உளவுத் துறை என்பது காலத்தின் கட்டாயம். அப்படி ஒன்று இருந்தால்தான், சுற்றிலும் என்ன நடக்கிறது என்பது நமக்குத் தெரியும், கவனமாக நம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

போர் முடிந்ததும் உளவுத் துறையைக் கலைப்பது முட்டாள்தனம், கொஞ்சம் தொலைநோக்குப் பார்வையோடு யோசித்துப்பாருங்கள், நான் சொல்வதில் இருக்கும் நியாயம் புரியும்" டொனொவன் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார்.

ஆனால், போர் இல்லாத அமைதிக் காலத்தில் அமெரிக்காவுக்கு ஓர் உளவுத்துறை தேவை என்பதை யாரும் ஏற்கத் தயாராக இல்லை.

சாதாரணமாக, டொனொவனுக்கு அமெரிக்க விரோதிகளைக் கொஞ்சமும் பிடிக்காது. ஆனால் இந்தச் சூழ்நிலையில், அவருக்குக் கை கொடுத்தது, அமெரிக்காவுக்குச் சவால் விட்டுக்கொண்டிருந்த ஒரு சக்திதான்.

அதன் பெயர், சோவியத் யூனியன்!

### 3. கோட்டுக்கு வெளியே

இரண்டு பேர், ஒருவரோடு ஒருவர் முறைத்துக்கொண்டு மோதத் தயாராக நிற்கிறார்கள்.

விரோதம் என்றால், ஜென்ம விரோதம். நேரடியாகவும் மறைமுகமாகவும் சவால் விட்டுக்கொண்டாகிவிட்டது. எனக்கு யார் ஆதரவு, உனக்கு யார் ஆதரவு, என்னால் என்ன முடியும், உன்னால் என்ன முடியும் என்றெல்லாம் கணக்குப் போட்டுக்கொண்டு, கவனமாக எதிர் நடவடிக்கைகளைத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

இந்தச்சூழ்நிலையில், அந்த இருவரில் ஒருவர்மட்டும் திடீரென்று ஓர் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டு விடுகிறார். இப்போது இன்னொருவர் என்ன செய்வார்? அப்படியொரு திகைப்பில்தான், அப்போதைய அமெரிக்கா மூழ்கிப் போயிருந்தது. அவர்களின் உலக ஆதிக்கத்துக்கு ஒரே சவாலாக நினைத்து பயந்த சோவியத் யூனியன், தங்களுடைய கதவை இறுகச் சாத்திக் கொண்டுவிட்டார்கள்.

இதற்காக, அவர்கள் அமெரிக்காவின் வம்பு வழக்குக்கு வராமல் ஒதுங்கிப் போய்விட்டார்கள் என்று அர்த்தம் இல்லை. தாங்கள் என்ன செய்கிறோம் என்று யாருக்கும் தெரியாதபடி மறைந்துகொண்டு வேலைகளில் இறங்கினார்கள்.

இதனால், சோவியத் யூனியனுள் என்ன நடக்கிறது என்பதே வெளியாட்கள் யாருக்கும் தெரியவில்லை. தெரியவேண்டும் என்கிற அவசியம் இல்லை என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார் அப்போதைய ஆட்சியாளர் ஸ்டாலின்.



மூடிய கதவுகளுக்குள், அப்படி என்னதான் நடக்கிறதோ என்று பல நாடுகள் ஆர்வமானார்கள். சோவியத் யூனியனைத் "இரும்புத் திரை" என்று வர்ணித்தார்கள். அதற்கெல்லாம் அலட்டிக் கொள்ளாமல், அவர்கள் திரையை மேலும் கனமாக்கிப் பதுங்கிக் கொண்டு விட்டார்கள்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை, சோவியத் யூனியன் என்ன செய்கிறது என்பதைத் தெரிந்துகொள்வது ஆர்வம் அல்ல, அவசியம். காரணம், அவர்கள் என்ன செய்தாலும், அதன் பின்விளைவுகள் நிச்சயமாக அமெரிக்காவின் தலையில்தான் வந்து விழும்.

இரண்டாவது உலகப் போரின் போது அமெரிக்கா ஜப்பான்மீது அணுகுண்டு வீசி, அந்நாட்டைக் கடுமையாகச் சேதப்படுத்தியிருந்தது. அந்த ஹிரோஷிமா, நாகசாகி சம்பவங்களின்போதுதான், அமெரிக்கா உட்பட, எல்ல நாடுகளும் அணு ஆயுதங்களின் வலிமையை, அவை உருவாக்கக்கூடிய ஆபத்துகளைப் புரிந்துகொண்டன.

இதனால், ஒருபக்கம் "அணு ஆராய்ச்சிக்கு", அணு ஆயுதங்களை உருவாக்குவதற்குத் தடை விதிக்கப் படவேண்டும்" என்று மனிதாபிமானக் குரல்கள் எழுந்தன.

இன்னொருபக்கம், நம்மிடம் நாலு அணு ஆயுதம் இருந்தால்தான் நல்லது என்று எல்லோரும் அதற்கான ஆய்வுகளில் இறங்கிவிட்டார்கள். அமெரிக்கா வைத்த வெடி, அவர் கள் மீதே வந்து விழும்போலாகி விட்டது. சாதாரணமாகவே சோவியத் யூனியன்காரர்கள் அறிவியல் ஆராய்ச்சிகளில் கெட்டி, இப்போது அணு ஆயுதம்தான் வலிமையின் அடையாளம் என்று அமெரிக்காவே அவர்களுக்குக் கோடு போட்டுக் காட்டிவிட்டது.

இதனால், சோவியத் யூனியன் அணு ஆயுதம் தயாரிக்கிறதா, ஆம் எனில், அதில் அவர்கள் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறார்கள், அவர்களுடைய படை பலம் எப்படிப் பட்டது, எங்கே எவ்வளவு ராணுவம் திரட்டிவைத்திருக்கிறார்கள், என்னென்ன நவீன ஆயுதங்களைப் புதிதாகக் கண்டறிந்திருக்கிறார்கள் என்று ஏகப்பட்ட விடயங்களைத் தெரிந்துகொள்ளத் துடித்தது அமெரிக்கா.

இதற்கு வழியே தராமல், சோவியத் யூனியன் தனது பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்தி விட்டது.

வெளிநாட்டினர் அங்கே போவதற்கு ஏகப்பட்ட கட்டுப்பாடுகள், அப்படியே சென்றாலும், அவர்களுக்கு எந்த ரகசியங்களும் கிடைத்துவிடாதபடி கவனமாகப் பார்த்துக்கொண்டார்கள், அயல்நாட்டு உளவாளி என்று சந்தேகத்துக்கிடமாக யார் சிக்கினாலும், ஜென்மத்துக்கும் வெளியே வந்துவிடாதபடி உள்ளே அடைத்து வைத்தார்கள். இதுபோன்ற நடவடிக்கைகளால், அமெரிக்காவின் குறுகுறுப்பு மேலும் அதிகரித்தது. சோவியத் யூனியனுள் அப்படி என்னதான் நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளாதவரை, நம்முடைய பாதுகாப்பு நிச்சயமில்லை என்று தெளிவாக முடிவுகட்டி விட்டார்கள்.

அப்போதுதான், அமைதிக்காலத்திலும் உளவுத்துறை அவசியம் என்று டொனொவன் கரடியாகக் கத்திக்கொண்டிருப்பதன் முழு அர்த்தமும் அமெரிக்கர்களுக்குப் புரிந்தது.

1946 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், CIG (Central Intelligence Group) என்ற பெயரில் ஒரு புதிய உளவு அமைப்பை உருவாக்கினார் அப்போதைய அமெரிக்க அதிபர் ட்ரூமன் (Harry S Truman).

பின்னர் CIG யின் பெயர் CIA (Central Intelligence Agency) என்று மாற்றப்பட்டது. 1947 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 18 ஆம் திகதி, சிஐஏ யின் பிறந்த நாளாகக் கொண்டாடப்படுகிறது.

சிஐஏ தொடங்கப்பட்ட காலகட்டத்தில், அதன் முக்கியக் கடமைகளாக வரையறுக்கப்பட்டிருந்த சில விடயங்கள்: அமெரிக்காவின் பகை நாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வது அமெரிக்காவின் நட்பு நாடுகள், அமைப்புகளுக்கு ஆதரவான நடவடிக்கைகளில் ஈடுபடுவது, இந்த நடவடிக்கைகள் அனைத்திற்கும், அமெரிக்க அரசு தான் ஆதரவு, பண உதவி அளிக்கிறது என்பது வெளியே தெரியாமல் நடந்து கொள்வது, அமெரிக்க கருத்துகள், கொள்கைகளை அயல் நாடுகளில் பரப்புவது, அமெரிக்காவுக்கு எதிராக இயங்கும் நாடுகளில் எதிர் இயக்கங்களுக்கு நேரடி/மறைமுக ஆதரவு தருவது, கம்யூனிசத்துக்கு எதிரான நாடுகள், இயக்கங்களிற்கு உதவுவது

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.சர்வதேச...


வின் சுரானா மற்றும் சுரானா சட்ட நிறுவனத்துடன் இணைந்து 2026ஆம் ஆண்டின் யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாட்டை எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

அந்தவகையில் இம்மூன்றாவது சர்வதேச சட்ட மாநாடானது இரு தினங்களும் மருத்துவ பீடத்தின் கலையரங்கில் காலை 9 மணி முதல் மாலை வரை இடம்பெறவுள்ளது.

ஆய்வு, மறுவடிவமைப்பு, மீள்நிர்மாணம் எனும் தொனிப்பொருளின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ்வருட மாநாட்டில் இலங்கை உயர்நீதிமன்ற நீதிபதிகள் உள்ளடங்கலாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்கள் பலர் கலந்துகொண்டு மாநாட்டின் தொனிப்பொருள் சார்ந்ததான பல்வேறு விடயப் பரப்புகள் தொடர்பில் உரையாடவுள்ளனர்.

மாநாட்டின் முதல் நாளன்று பிரதம விருந்தினராக உயர்நீதிமன்ற நீதிபதி சிதம்பரம்பிள்ளை துரைராஜாவும் கௌரவ விருந்தினராக மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதிபதி ரோகத்த அபேசூரியவும் சிறப்பு விருந்தினராக, வெளியுறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் மேலதிக செயலாளருமான சரண்யா ஹசந்தி உருகொடவத்தே திசாநாயகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-7)



















## யாழ்ப்பாணம் போதனா...

மேற்படி குழுக் கூட்டம் வைத்தியர் நிஹால் அபேசிங்கேவின் தலைமையில் நடைபெற்றது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர்கள், சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் அனில் ஜயசிங்கே, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர், வைத்திய நிபுணர்கள் மற்றும் யாழ். மருத்துவ பீடாதிபதி குழுவினர் கலந்து கொண்டு, வைத்தியசாலையின் தற்போதைய நிலைமை மற்றும் சேவைகள் குறித்து விரிவாக விளக்கினர். குறிப்பாக ஆளணிப் பற்றாக்குறை காரணமாக வைத்தியசாலை எதிர்நோக்கும் சவால்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இதற்குத் தீர்வாக, எதிர்வரும் காலங்களில் தேவையான சுகாதார ஊழியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மேற்பார்வைக் குழு உறுதி அளித்தது.

மேலும் வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் உள்ளிட்ட தற்போதைய ஆளணியை அதிகரிப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்காக, விரைவில் மேலதிக கலந்துரையாடல்கள் நடத்தப்படவுள்ளதாகத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், இலங்கையிலுள்ள மூன்று தேசிய வைத்தியசாலைகளுக்கு அடுத்ததாக, யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையை நான்காவது தேசிய வைத்தியசாலையாக தரம் உயர்த்துவது குறித்த தீர்மானமும் எடுக்கப்பட்டது.

இதற்காகத் தேவையான அடிப்படை ஆளணி அதிகரிப்பு மற்றும் சில முக்கிய சேவைகள் விரிவுபடுத்தப்பட்டு, தேசிய வைத்தியசாலையாக அறிவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (ம-7)

## நிலைகுலைந்து...

கதிரன் ஐயாத்துரை (வயது - 73) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் கடந்த 19ஆம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்டு, துவிச்சக்கர வண்டியுடன் வீதிக்குள் நுழைய முயற்சித்தார்.

இதன்போது காங்கேசன்துறை பக்கத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிள் ஒன்று பயணித்தபோது அவர் நிலைதடுமாறி கீழே விழுந்துள்ளார்.

இதில் காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (21) உயிரிழந்துள்ளார்.

உயிரிழப்புத் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7,104)

## யாழ்ப்பாணம் சர்வ...

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கண்காட்சியில் கட்டுமானம், வாகனங்கள், நுகர்வோர் பொருட்கள், விவசாயம், உணவு மற்றும் பானங்கள், தகவல் தொழில்நுட்பம், நிதிச் சேவைகள் மற்றும் கல்வி உட்பட பல துறைகளைச் சார்ந்த 400க்கும் அதிகமான கூடங்கள் இம்முறை இடம்பெறவுள்ளன.

பார்வையாளர்கள் கூடங்களை எளிதாகக் கண்டறியவும், கண்காட்சியாளர்கள் பற்றிய விபரங்களைப் பெறவும் பிரத்தியேக கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நிலையான தன்மையை நோக்கமாகக் கொண்டு, கழிவு முகாமைத்துவம் மற்றும் மீள்சுழற்சி முறைகள் இம்முறை அமுல்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து, லங்கா எக்சிபிஷன் எண்ட் கொன்பரன்ஸ் சர்வீசஸ் நிறுவனம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

இந்தக் கண்காட்சி உள்ளூர் தொழில்முனைவோர், முதலீட்டாளர்கள் மற்றும் நுகர்வோருக்கு ஒரு சிறந்த பாலமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கண் காட்சிக்கு வலம்புரி பத்திரிகை நிறுவனம் ஊடக அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வைத்...

இலவசசுகாதார சேவை மற்றும் வைத்தியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் சுகாதார அமைச்சு வழங்கிய இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்தத் தவறியமையினாலேயே இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் மகப்பேற்று வைத்தியசாலைகள், சிறுவர் வைத்தியசாலைகள், சிறுநீரக வைத்தியசாலைகள் மற்றும் புற்றுநோய் வைத்தியசாலைகள் என்பன வழமை போல் இயங்கும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## மண் மேடு...

குறித்த பகுதியில் ஹோட்டல் நிர்மாணப் பணியின்போது நேற்று மதியம் மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த மூவர் போனங்கஹஹேன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை, அநுராதபுரம்மற்றும்மாத்தறை பகுதிகளைச் சேர்ந்த மூவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். (ம-7)






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணல் விற்பனை/ பொமிட் போட்டுத் தரப்படும்

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற பூச்சு மணல் விற்பனைக்கு உண்டு. யாழ். மாவட்டத்திற்கு 65,000 இருந்து.. மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ். மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டுத் தரப்படும்.

(1967)

**076 324 9977**


### பிரதமர் ஹரிணிக்கு எதிரான

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை பாராளுமன்றில் சமர்ப்பிக்குக

## எதிர்க்கட்சியிடம் ஆளும் கட்சி கோரிக்கை

பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் நம்பிக்கையில்லாப் பிரேரணை கையெழுத்திடப்பட்டிருந்தால் மேலும் தாமதப்படுத்தாமல் அதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சியிடம் ஆளும் கட்சியினர் கேட்டுக்கொண்டுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவும் ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவும் எதிர்க்கட்சியிடம் இவ்வாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

இது தொடர்பில், அமைச்சர் பிமல் ரத்நாயக்க கருத்துத் தெரிவிக்கையில்,

பிரதமருக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று கையெழுத்திடப்படுவதாக அண்மைக் காலமாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின்றன.

பிரதமர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று கொண்டுவரப்படுவதாகக் கூறப்படுவது மிகவும் முக்கியமான விடயமாகும்.

இத்தகைய நிலையில் அரசாங்கத்தினால் இந்த வாரத்தின் பாராளுமன்ற அமர்வுக்கான நான்கு நாட்களுக்கு நிகழ்ச்சி நிரல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. எனினும் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைத் தயாரித்து அதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்காமல் இருப்பது பிரச்சினைக்குரியதே என்றார்.

அந்தவகையில் எதிர்க்கட்சி அதனை முன்வைத்தால் அதற்கான விவாதத்திற்கு நேரத்தை ஒதுக்க முடியும். இதனால் அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படுமா? இல்லையா? என்பதை எதிர்க்கட்சி தெரிவிக்க வேண் டும். பிரதமருக்கு எதிராக நம்பிக்கை யில்லாப் பிரேரணை கையெழுத்திடப்பட் டுள்ளது என்றால் அதனை சபையில் சமர்ப்பியுங்கள். இல்லாவிட்டால் அது நாட்டின் ஸ்திரத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். அது சமர்ப்பிக்கப்படுமா? இல்லையா? என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## மீனவர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை

மீனவர்களுக்கு அதிக சலுகைகளுடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி, நீரியல் வளத் திணைக்களம், விவசாய, கமநலக் காப்புறுதிச் சபை ஆகியன இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ளன.

மீனவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப ஓய்வூதியத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் தலைவர் பிரேமசிறி ஜாசிங்கஆராச்சி தெரிவித்தார். (ம-7)


### மலிவு விலையில்

பாடசாலை மாணவர்களுக்கான காலுறைகள்




மொத்த கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவு

**076 315 6470**

(C-4867)

ஸ்ரீமுருகன் No,303, K.K.S Road, Jaffna.

### விற்பனைக்கு – பற் சிகிச்சை நிலையம்

யாழ் நகரத்திற்கு மிக அண்மையாக கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் பற் சிகிச்சை நிலையம் (Dental clinic) ஒன்று விற்பனைக்குண்டு (கட்டடம் தவிர்ந்த)

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல :

**077 714 5838**

(6629)

## மாப்பிள்ளை தேவை

01. வேலணை, இந்து, 1992, ரேவதி, MBBS doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (32198)
02. அல்வாய் - கோப்பாய், இந்து, ரோகிணி, 1993, Phd, Lecture, canada பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (33627)
03. தெல்லிப்பழை, இந்து, 1994, பூரட்டாதி, MBBS, MD, Doctor, USA citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (36611)
04. காரைநகர், இந்து, 1995, பூரம், BSc, Bank officer, UK citizen, born & brought up in uk பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (33254)
05. கொக்குவில், இந்து, 1996, பூரட்டாதி electrical engineer, USA citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55426)
06. சுதுமலை, இந்து, 1994, சுவாதி, CPA Accountant, Divorce, Australia citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (33103)
07. தெல்லிப்பழை, இந்து, 1993, அவிட்டம், Masters, scientist, UK + France citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (56817)
08. குப்பிளான், இந்து, 1997, கேட்டை, Lawyer, Germany citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55147)
09. சரவணை, இந்து, 1993, அஸ்வினி, BSc software Engineer, Singapore citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54241)
10. நீர்வேலி, இந்து, 1996, பூராடம், A/L, IELTS, widow (விதவை) பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (52941)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு.

(C-4865)

S.Sharma J.P | 077 539 3728
www.thaalee.com | 077 992 1494

### வீட்டு வேலையாளர் தேவை

வயோதிப ஆண் ஒருவரைப் பராமரித்தல், வீட்டுச் சமையலுக்கு உதவுதல் மற்றும் ஏனைய வீட்டு வேலைகள் செய்வதற்கு பணியாளர் உடன் தேவை.

(1968)

**077 277 3612**

### யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரபலமான நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை

**Restaurant**
- Manager
- Kitchen Helper
- Cashier
- House Keeping
- Waiters
- Maintenance

**International Airport Café (Palaly)**
- Cashier
- Waiters
- Cooks
- Kitchen Helper

**Harber Restaurant Café (KKS)**
- Cashier

**Petrol Shed ( Navatkuli )**
- Manager
- Pumpers

இருபாலரும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். வெளிமாவட்டத்தவர்களுக்கு தங்குமிடம், உணவு வழங்கப்படும்.

(C-4866)

021 222 5899/ 070 222 7100

## மணப்பெண் தேவை

01. வண்ணார்பண்ணை, இந்து, 1988, திருவோணம், Network Engineering, Deputy manager, vegetarian மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (53218)
02. சாவகச்சேரி, இந்து, 1989, அனுஷம், BSc IT, Software Engineer, singapore, vegetarian மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (38366)
03. சாவகச்சேரி, இந்து, 1990, விசாகம், Doctor, Bachelor of dental surgery, Dentist, vegetarian மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (42706)
04. புலோலி, இந்து, 1987, பூராடம், MSc, site Engineer, UK, Vegetarian மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (50016)
05. யாழ், இந்து, 1991, கார்த்திகை, Masters of accounting and finance, Accountant, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (43419)
06. கோப்பாய், இந்து, 1990, உத்தரம், civil Engineering, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (32598)
07. கோப்பாய், இந்து, 1992, உத்தரம், Phd in computer science, Research Assistant, USA மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (42604)
08. காரைநகர், இந்து, 1993, பூசம், software engineering, Engineer, USA citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(31050)
09. உரும்பிராய், இந்து, 1989, பூசம், Masters of professional Accounting, financial officer, canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(45173)
10. யாழ், இந்து, 1988, புனர்பூசம், B.Eng software, software consultant, canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (30887)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு.

(C-4865)

S.Sharma J.P | 077 539 3728
www.thaalee.com | 077 992 1494


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org